Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, APRIL 1, 2022

வெள்ளிக்கிழமை ஏப்ரல் 01, 2022 | ஒளி: 07 கதிர்: 271 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



# நாளைமுதல் சற்று குறையும்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கைக்கு வரவிருக்கும் டீசல் கையிருப்பை மின்சார சபைக்கு வழங்குவதற்கு உறுதியளித்துள்ளதன் காரணமாக, நாளைமுதல் (02) மின்வெட்டு நேரம் குறைக்கப்படும் என இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.சி.பெர்டினாண்டோ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# தமிழர்களுக்கு உதவ அனுமதிக்க வேண்டும்

## மோடியிடம் ஸ்டாலின் கோரிக்கை



இலங்கையில் பொருளாதார நெருக்கடியில் தவிக்கும் தமிழர்களுக்கு உதவ அனுமதிக்க வேண்டும் எனவும், யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய தூதரகத்தின் வழியாக, உதவிகளை வழங்க மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்றும் பிரதமர் மோடியிடம் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

# மத்தியகிழக்குநாட்டு நாணயங்களுக்கும் மவுசு

## ரூ.1,000ஐ விஞ்சியது குவைத் டினார்



இலங்கையின் சில வங்கிகளில் 1 குவைத் டினாரின் பெறுமதி 1,000 ரூபாயை விட அதிகரித்துள்ளது. நேற்றையதினம் (31) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களின் அடிப்படையில் குவைத் டினாரொன்றின் பெறுமதி 984 ரூபாய் 36 சதமாகக் காணப்பட்டது. எனினும் சில வங்கிகளில் 1,001 ரூபாய் 70 சதமாக டினாரின் பெறுமதி காணப்பட்டதாக தெரியவருவதுடன், மத்திய கிழக்கு நாணயங்களுக்கு எதிராக ரூபாய் மதிப்பும் சரிந்துள்ளது.

தொடர்ச்சி P2



அத்தியாவசிய சேவையை பேணி

# நாட்டை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கவும்

தற்போதைய சூழ்நிலையில் அத்தியாவசிய சேவைகளை மாத்திரம் முன்னெடுத்து, நாட்டை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க வலியுறுத்தினார். கொழும்பில் நேற்று (31) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட

# சொக்கா மல்லி உட்பட மூவர் விடுதலை



மனிதப் படுகொலை வழக்கில் மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர (சொக்கா மல்லி) உள்ளிட்ட மூவரை விடுவித்து விடுதலை செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (31) கட்டளை பிறப்பித்தது. நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஆர். குருசிங்க ஆகியோரடங்கிய நீதியரசர்கள் குழாம், தீர்ப்பை அறிவித்ததுடன்,

தொடர்ச்சி P2

மின் உற்பத்திக்கு

# 6,000 மெற்றிக் தொன் டீசல் வழங்க ஐ.ஓ.சி இணக்கம்

மின்னுற்பத்தி நிலையங்களுக்கு 6,000 மெற்றிக் தொன் டீசலை வழங்குவதற்கு இந்திய எண்ணெய் நிறுவனம் (ஐ.ஓ.சி) இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கை மின்சார சபை, நேற்று (31) தெரிவித்தது. டீசல் பற்றாக்குறை காரணமாக செயலிழக்க ஆரம்பித்துள்ள களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையம் மாத்திரமே தற்போது செயற்படுத்தப்படுவதாக இலங்கை மின்சார சபை குறிப்பிட்டது.

தொடர்ச்சி P2

பெரும்பான்மையில்

# அரசாங்கத்தை அசைக்க முடியாது

## ரணிலுக்கு பிரதமர் பதவி இல்லை என்கிறார் தினேஷ்

சேஹ்ன் செனவிரத்ன



அரசாங்கத்தின் பெரும்பான்மையை இல்லாமல் செய்யும் அறிக்கைகள் செல்லுபடியாகாது என்பதுடன், அரசாங்கத்தின் பெரும்பான்மையை அசைக்கவே முடியாது எனத் தெரிவித்த கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்தன, பல தடவைகள் பிரதமர் பதவியை வகித்த ரணில் விக்கிரமசிங்க முதிர்ச்சியடைந்த அரசியல்வாதி என்பதால் அவரது யோசனைகளை செவி மடுக்கத் தயார் என்றும் அவருக்கு பிரதமர் பதவியை வழங்க எந்த எதிர்பார்ப்பும் இல்லை என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ராஜபக்ஷர்களில்

# தந்தையும் தனயனும் ஒரேமாதிரி அறிவிப்பு



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அவரது புதல்வரான அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகிய இருவரும் ஒரேமாதிரியான அறிவிப்பை நேற்றையதினம் (31) விடுத்துள்ளனர். முன்னதாக அறிவிப்பை விடுத்திருந்த விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, தனது அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் கடமையாற்றுவோர், வீட்டில் இருந்தே வேலை செய்யும் முறைமைக்கு மாறுமாறு அறிவுறுத்தியிருந்தார்.

தொடர்ச்சி P2

# (சா/த) பரீட்சையை பிற்போடும் நோக்கமில்லை

எதிர்வரும் மே மாதம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை, திட்டமிட்டபடி நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று கல்வியமைச்சர் தினேஷ் குணவர்தன அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

கொவிட்-19 யாழ். சிகிச்சை நிலைய மோசடி

# உடனடி விசாரணைக்கு பிரதமர் பணிப்பு

கொவிட் -19 யாழ். சிகிச்சை நிலையங்களில் இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் மோசடிகள் தொடர்பில், உடனடி விசாரணைகளை முன்னெடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பணித்துள்ளார். வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவை நேற்று (31) தொடர்புகொண்டு இவ்விடயம் தொடர்பில் உடனடி கவனம் செலுத்துமாறு பிரதமர் அறிவுறுத்தியுள்ளார். யாழ். மாவட்டத்தில் அமைக்கப்பட்ட மூன்று கொவிட் -19 இடைத்தங்கல் முகாம்களில் காணப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் மாயமாகியிருந்தமை கணக்காய்வு அறிக்கையில் அம்பலமாகியது.

தொடர்ச்சி P2

அநாமதேய போராட்டங்களில்

# பங்கேற்காது ஐ.தே.க; ஜே.வி.பியும் எச்சரித்தது







அநாமதேயக் குழுக்களால் நடத்தப்படும் எந்தவொரு போராட்டத்திலும் ஐக்கிய தேசிய கட்சி பங்கேற்காது என்று அக்கட்சி அறிவித்துள்ளது. நாடு முழுவதும் எங்களின் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். அடுத்த சத்தியாக்கிரகப் போராட்டம் ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி மாத்தறையில் நடைபெறவுள்ளது எனவும் தெரிவித்துள்ள ஐ.தே.க அனைவரையும் எங்களுடன் சேர அழைக்கிறோம் என்றும் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

நெருக்கடியிலிருந்து மீள

# அசுர வேகத்தில் செயற்பட வேண்டும்

## மந்தகதியில் செயற்படுவதாக ஜெய்சங்கர் தெரிவிப்பு



இலங்கை எதிர்நோக்கியுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கு அசுர வேகத்தில் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், தற்போது காணப்படும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கை மந்த கதியிலேயே செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

மின், எரிபொருள், எரிவாயு நெருக்கடிகளால்

# வீதிக்கு இறங்கி மக்கள் போராட்டம்

நாட்டில் நிலவுகின்ற மின்சாரம், எரிபொருள், எரிவாயு நெருக்கடிகளுக்கு தீர்வு கோரி நாட்டின் பல பகுதிகளில் நேற்றையதினம் (31) மக்கள் நடத்திய போராட்டங்கள் காரணமாக சில இடங்களில் போக்குவரத்து நெரிசலும் தடையும் ஏற்பட்டிருந்தன. காலி - கொழும்பு பிரதான வீதியின் பலப்பிட்டிய பகுதியில் நேற்று முற்பகல் வீதியை மறித்த மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் அங்கு போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. எரிவாயு தட்டுப்பாடு காரணமாக கண்டி, அம்பலாங்கொடை, உடவளவ, கொள்ளுபிட்டிய ஹொரணை உள்ளிட்ட பல பகுதிகளிலும் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

தொடர்ச்சி P2



வெள்ளவத்தையிலுள்ள வெளிநாட்டு

# நாணய மாற்று நிறுவன அனுமதி இடைநிறுத்தம்

வெள்ளவத்தையின் 'பிரசன்ன மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட்' நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட பணப்பரிவர்த்தனைக்கான அனுமதிப்பத்திரத்தை இலங்கை மத்திய வங்கி இடைநிறுத்தியுள்ளது. அதிக மாற்று விகிதங்களை வழங்குவதாக பொது மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் அன்னிய செலாவணி திணைக்களம் 30.03.2022 அன்று பிரசன்ன மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட் தொடர்பில் விசாரணையை நடத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.



PAGE 1 தொடர்ச்சிகள்

# தமிழர்களுக்கு உதவ அனுமதிக்க வேண்டும்

நான் நாள்ககள் பயணமாக புதுடெல்லி சென்றுள்ள தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிரதமர் நரேந்திர மோடியை புதுடெல்லி பாராளுமன்ற வளாகத்தில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் நேற்று (31) சுமார் 30 நிமிடங்கள் சந்தித்துப் பேசினார். அப்போது அவரிடம் தமிழகம், தமிழர்கள் தொடர்பாக 14 முக்கிய கோரிக்கைகளை ஸ்டாலின் முன்வைத்தார். அந்தக் கோரிக்கைகளில் கச்சத்தீவை மீட்பது, தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்டெடுப்பது ஆகியவற்றையும் அவர் முன்வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

(i) இலங்கை தமிழர் பிரச்சினை- ஈழத் தமிழர்களுக்கு சம உரிமை மற்றும் அரசியல் உரிமைகள்.

(ii) இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலையின் காரணமாக அல்லலுறும் இலங்கை தமிழர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உயிர்காக்கும் மருந்துகளை தமிழக அரசின் சார்பில் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்பாக.

இலங்கையில் பொருளாதார நெருக்கடியில் தவிக்கும் தமிழர்களுக்கு உதவ அனுமதிக்க வேண்டும் எனவும், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய தூதரகத்தின் வழியாக உதவிகளை வழங்க மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்றும் பிரதமரிடம் மு.கா. ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

புதுடெல்லியில் கட்டப்பட்டுள்ள திராவிட முன்னேற்ற கழக (தி.மு.க) அலுவலகமான அண்ணா - கலைஞர் அறிவாலய திறப்பு விழா, ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## நாளைமுதல்...

நேற்று (31) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

இதன் விளைவாக நாளை முதல் நான்கு மணி நேரத்துக்கும் குறைவான மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் மின்சார சபைக்கு தொடர்ந்து உலை எண்ணெய் மற்றும் டீசல் விநியோகம் கிடைத்தால், மின்வெட்டை முடிவுக்கு கொண்டு வர முடியும் என்றும் குறிப்பிட்டார்.

மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய மின்சார சபையினால் தற்போது முடியாது எனவும் தற்போது நிலக்கரி மின் உற்பத்தி மூலம் தேவையைப் பூர்த்தி செய்து வருவதாகவும் கூறினார்.

நீர் மின் நிலையங்கள் மூலம் 300 மெகாவோட் மட்டுமே உற்பத்தி செய்ய முடியும் என்று கூறிய அவர், மாலை 6:30 மணி முதல் இரவு 10 மணி வரை 800 மெகாவாட் தேவைப்படுவதாகவும் நீர் மின் மூலம் அதை நிறைவேற்ற முடியாது என்றும் கூறினார்.

அனல் மின் நிலையங்கள் தேசிய மின் கட்டமைப்புக்கு 1,100 மெகாவோட் வழங்குகின்ற போதும் எரிபொருள் பற்றாக்குறையால் அதுவும் பாதிக்கப்படுகிறது என்றார்.

## நாட்டை...

இலங்கை மின்சார சபையை உடனடியாக நிபுணர்கள் சபையின் கட்டுப்பாட்டில் ஒப்படைக்க வேண்டும் என்றும் வளமான நாட்டில் எழுபத்தைந்து மில்லியன் மின் நுகர்வோர், ஒரு நாளைக்கு 13 மணிநேரம் மின்சாரம் இன்றி வாழ வேண்டியுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

மின்சாரம் இன்மையால் நான்கு இலட்சத்துக்கும் அதிகமான சிறுகடைகளும் இலட்சக்கணக்கான சிறு மற்றும் நடுத்தர தொழில்களும் இன்று அழிந்து போகும் எனவும் குறிப்பிட்டார்.

குளிர்சாதனப் பெட்டிகளைப் பயன்படுத்தும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உணவு விற்பனை நிலையங்கள் இன்று பாரிய நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாகவும், உணவு மற்றும் மருந்துகளின் தரம் தொடர்பில் பாரிய பிரச்சினைகள் எழுந்துள்ளதாகவும் கூறினார்.

மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடியை இந்த அரசாங்கம் இன்னும் புரிந்து கொள்ளவில்லை எனவும் மேலும் குறிப்பிட்டார்.

## உடனடி...

வடமாகாண சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் கண்காணிப்பில் இந்த கொரோனா இடைத்தங்கல் முகாம்கள் செயற்பட்டுவந்தன.

வடமாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் பல ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருகின்றமை குறித்து குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சொக்கா மல்லி...

சகல குற்றச்சாட்டுகளிலும் இருந்தும் மூவரையும் விடுவிக்குமாறு உத்தரவிட்டது. பாராளுமன்ற உறுப்பினர் பிறிமலால் ஜயசேகரவுக்கு மேலதிகமாக சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் நிலந்த ஜயக்கொடி, கஹவத்தை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் வஜிர தர்ஷன ஆகியோரே விடுவிக்கப்பட்டுள்ளனர். 2015 ஜனாதிபதி தேர்தலின் போது கஹவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றின் போது, நபரொருவரை சுட்டுக் கொலை செய்தமை உள்ளிட்ட குற்றங்களுங்காக இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

**“ இரத்தினபுரி மேல் நீதிமன்ற நீதிபதியால் விதிக்கப்பட்ட மரண தண்டனையை இரத்துச் செய்து தம்மை விடுதலை செய்யுமாறு கோரி பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூவரும் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுக்களை தாக்கல் செய்திருந்தார்கள்**

குற்றச்சாட்டுகள் நிரூபணமானதையடுத்து, பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூவருக்கும் இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தால் 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் திகதி மரண தண்டனை விதிக்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இரத்தினபுரி மேல் நீதிமன்ற நீதிபதியால் விதிக்கப்பட்ட மரண தண்டனையை இரத்துச் செய்து தம்மை விடுதலை செய்யுமாறு கோரி பாராளுமன்ற உறுப்பினர் பிறேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூவரும் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுக்களை தாக்கல் செய்திருந்தையடுத்தே நேற்றையதினம் தீர்ப்பளிக்கப்பட்டது.

## தந்தையும் தனயனும்...

எரிபொருள் மற்றும் மின்சாரத்தை சேமிக்கும் வகையிலேயே இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இந்நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் இதேமாதிரியான அறிவிப்பை விடுத்துள்ளார். எரிபொருள் பாவனையை குறைப்பதற்காக வீட்டில் இருந்தே வேலை செய்யும் நிலைக்கு மாறுமாறு பிரதமர் அலுவலகம் மற்றும் தனக்கு உட்பட்ட அனைத்து அமைச்சுக்களின் ஊழியர்களுக்கும் அறிவித்துள்ளார்.

## 6,000 மெற்றிக்...

கெனியன் நீர் மின்னுற்பத்தி நிலையத்தில் ஒரு மின்பிறப்பாக்கி மாத்திரம் செயற்படுத்தப்படுவதாகவும் ஏனைய அனைத்து அனல் மின் உற்பத்தி நிலையங்களும் தற்போது செயலிழந்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 810 மெகாவோட் மின்சாரம் தேசிய கட்டமைப்பில் நேற்று இணைக்கப்படுவதாகவும் மின்சார சபை தெரிவித்துள்ளது.

## அசுர கேத்தில்...

நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

தற்போது காணப்படும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கை மந்த கதியிலேயே செயற்படுவதாகவும் இலங்கையின் தற்போதைய நெருக்கடியிலிருந்து மீண்டு வர, உரிய காலத்துக்குள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்காக அண்மையில் பெற்றுக்கொடுக்கப்பட்ட ஒரு பில்லியன் டொலர் இந்திய கடன் வசதியை உடனடியாக செயற்படுத்துவதாக உறுதி வழங்கியுள்ளார்.

திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் உள்நாட்டு அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமையவே முன்னெடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## மத்திய கிழக்கு நாட்டு...

பஹ்ரைன் டினார் ரூ. 797.33 ஆகவும், ஓமான் ரியால் ரூ. 785.59, கட்டார் ரியால் ரூ. 83.98 ஆகவும், சவூதி ரியால் ரூ. 84.24, ஐக்கிய அரபு அமீரக திர்ஹாம் ரூ. 84.87 ஆக காணப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

எனினும் மத்திய வங்கியின் அறிக்கைக்கு அமைய பஹ்ரைன் டினார் ரூ. 793.02 ஆகவும், ஓமான் ரியால் ரூ. 776.51, கட்டார் ரியால் ரூ. 81.82 ஆகவும், சவூதி ரியால் ரூ. 79.69, ஐக்கிய அரபு அமீரக திர்ஹாம் ரூ. 81.41 ஆக நாணயமாற்று விகிதம் அமைந்திருந்தது.

## அரசாங்கத்தின்...

கண்டி- அஸ்கிரிய பீடத்தின் மஹாநாயக்கரை நேற்று முன்தினம் (30) சந்தித்த பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கவில்லை என தெரிவித்தார்.

அவர் சிறந்த முதிர்ச்சியான அரசியல்வாதி. எனவே அவரது அபிப்பிராயங்கள் மற்றும் கருத்துகளுக்கு செவி சாய்க்க நாம் தயார் என்றும் எனினும் கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் அவரை தேசிய பட்டியல் உறுப்பினராகவே தெரிவு செய்தனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பில் எவர் மீதும் குற்றஞ்சுமத்துவதற்கு முன்னர், இயற்கை மீதே குற்றஞ்சுமத்த வேண்டும். கொரோனா தொற்றால் முழு உலகமே நெருக்கடியை சந்தித்துள்ளது.

அந்நிய செலாவணி பிரச்சினையைத் தீர்ப்பதில் நேச நாடுகளின் உதவிகள் கிடைத்துள்ளன. அரசாங்கத்தின் பெரும்பான்மையை இல்லாமல் செய்யும் அறிக்கைகள் செல்லுபடியாகாது என்பதுடன், அரசாங்கத்தின் பெரும்பான்மையை அசைக்கவே முடியாது. இந்த நேரத்தில் அரசாங்கம் செய்ய வேண்டியது அமைச்சுகளின் எண்ணிக்கயையை குறைப்பது அல்ல. மாறாக மேலும் திறம்பட செயற்படுவது என்றார்.

## பங்கேற்காது ஐ.தே.க...

இதேவேளை, அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக நடத்தப்படும் ஒழுங்கமைக்கப்படாத போராட்டங்களில் ஈடுபடும் பொது மக்களை விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்குமாறு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) எச்சரித்துள்ளது.

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ள அறிவிப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் நெருக்கடிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வதற்கு பொது மக்களுக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட இயக்கங்களுக்கும் உரிமை உண்டு. எவ்வாறாயினும், பொறுப்பான அல்லது சரியான அமைப்பாளர் இல்லாத ஒழுங்கமைக்கப்படாத போராட்டங்கள் குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

## வீதிக்கு இறங்கி...

எரிவாயு தட்டுப்பாடு மற்றும் மின்சார தடை காரணமாக கண்டி உள்ளிட்ட பல பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தமையையும் குறிப்பிடத்தக்கது.

நீண்ட நேர மின்சார துண்டிப்பு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிவாயு பிரச்சினை என்பன காரணமாக மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதுடன், பிரச்சினைகளுக்கு தீர்வு கோரியே மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் (30) இரவும் கொழும்பு உட்பட சில பகுதிகளில் நீண்ட நேர மின்வெட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## [சா/த] பரீட்சையை...

கண்டியில் நேற்று (31) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அமைச்சர், திட்டமிட்டபடி சா/த பரீட்சைகள் நடத்தப்படும் என்றார்.

பரீட்சைக்குத் தேவையான கடதாசியை தட்டுப்பாடு இன்றி விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார்.

எவ்வாறாயினும், நடைமுறையில் இருக்கும் மின்வெட்டுக்கு மத்தியில், சாதாரண தரப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு, கல்வித்துறையைச் சேர்ந்த பலரிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. எனினும், மே மாதம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கும் இந்த பரீட்சை, கடந்த டிசெம்பர் மாதம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 2021 ஆம் ஆண்டுக்கான சா/த பரீட்சையாகும் என்றும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

# இந்தியா, சீனாவின் பேசி முடிவெடுத்தால் நிவாரணம் கிட்டும்

மேற்கத்தேய நாடுகளும் சர்வதேச நாணய நிதியமும் இறக்குமதியைக் கட்டுப்படுத்த வேண்டாம் என்று கூறுகின்றன. ஆனால் இலங்கையின் பெரும்பாலான இறக்குமதிகள் இந்தியா, சீனா போன்ற நாடுகளில் இருந்து வருகின்றன. அவர்களிடம் பேசி முடிவெடுத்தால் நிவாரணம் கிட்டும் என்று நிபுணர்கள் கருத்துரைத்துள்ளனர்.

தற்போதைய பொருளதார பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலொன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது. இதன் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டெடுக்கவும் நீண்ட கால பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்தவும் பொருளாதார மறுமலர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை அடையாளம் கண்டு பொருளாதாரத் துறையில் நிபுணர்களின் பங்களிப்புடன் ஓர் அறிவார்ந்த ஏற்பாடுகளை மேற்கொள்வதே இதன் நோக்கமாகும் என்று பிரதமர் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் பணிப்பாளர் கலாநிதி அனில் பெரேரா,

2022 ஆம் ஆண்டளவில் உலகளாவிய பொருளாதார வளர்ச்சி சற்று குறைந்துள்ளது. இது இலங்கையின் ஏற்றுமதி, சுற்றுலா வருவாய் மற்றும் ஆராய்ச்சியை பாதித்துள்ளது. இதற்கு மேலதிகமாக ஏற்பட்ட பல சவால்களும் உள்ளன. ரஷ்யா-உக்ரேன் போர் மற்றும் சர்வதேச சந்தையில் பொருட்களின் விலை உயர்வு ஆகியவை நமது பொருளாதாரத்தையும் பாதித்துள்ளன. இருப்பினும், நமது ஏற்றுமதி தற்போது அதிகரித்து வருகிறது. அதே நேரத்தில், பொருளாதாரத்தின் நேர்மறையான வளர்ச்சிக்கு இறக்குமதியை ஓரளவு கட்டுப்படுத்துவது முக்கியம். அதேவேளை, தற்போதைய புவிசார் அரசியல் பிரச்சினைகள் நமது பொருளாதாரம் மீண்டு வருவதற்கு தடைகளை உருவாக்குகின்றன.

இந்த வருடத்தின் கடந்த மூன்று மாதங்களில் சுமார் 275,000 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். அது ஒரு நேர்மறையான அம்சமாகும். நாட்டுக்கு அந்நியச் செலாவணியைக் கொண்டு வருவது என்பது அவசரத் தேவையாகிவிட்டது. அதைத் தவிர, இதைத் தீர்ப்பது எளிதல்ல. பணமோசடியை தடுக்கவும் இலங்கைக்கு பணம் அனுப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுப்பது முக்கியம் என்றார். நிபுணர்கள் கருத்து

பொருளாதாரத்தில் தற்போதைய நெருக்கடி மற்றும் சாத்தியமான மாற்று வழிகள் குறித்தும் நிபுணர்கள் கருத்து தெரிவித்தனர்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம், சில காலமாக நீடித்து வரும் இறக்குமதி - ஏற்றுமதி இடைவெளியே. நமது நாடு ஏற்றுமதி செய்வதை விட அதிகமாக இறக்குமதி செய்கிறது. ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கொவிட் தொற்றுநோயால், சுற்றுலாத் துறை வீழ்ச்சியடைந்துள்ளது. மேற்கத்தேய நாடுகளும் சர்வதேச நாணய நிதியமும் இறக்குமதியைக் கட்டுப்படுத்த வேண்டாம் என்று கூறுகின்றன. ஆனால் இலங்கையின் பெரும்பாலான இறக்குமதிகள் இந்தியா, சீனா போன்ற நாடுகளில் இருந்து வருகின்றன. அவர்களிடம் பேசி முடிவெடுத்தால் நிவாரணம் கிட்டும்.

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால முறைகளின்படி இந்த நாட்டிற்கு அனுப்பும் பணத்தை சட்டப்பூர்வமாக கொண்டு வருவதும் அவசியம். இந்த நாட்டிற்கு முதலீட்டைக் கொண்டுவர தூதரகங்களை ஊக்குவிப்பதும் முக்கியம்.

புதிய வரிக் கொள்கையை அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது. உற்பத்தித் துறையை வலுப்படுத்த நிவாரணம் வழங்க வேண்டியதன் அவசியத்தையும் நிபுணர்கள் சுட்டிக்காட்டினர். 74 வருடங்களாக உருவாகி வந்த பொருளாதார நெருக்கடி ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கொவிட் தொற்றுடன் அதிகரித்துள்ளதையும் சுட்டிக்காட்டினர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அமைக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுக் குழுவின் தேவை தற்போதும் காணப்படுவதாக நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

அரசியல் காரணங்களால் நாட்டில் நிலவும் நிலைமை குறித்து மக்கள் மத்தியில் தவறான அணுகுமுறையை உருவாக்கி தேவையற்ற பொது அமைதியின்மையை ஏற்படுத்துவது தற்போதைய நெருக்கடியை அதிகப்படுத்தியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. வெளிநாட்டு சந்தைகளில் அதிக தேவை உள்ள உள்ளூர் தயாரிப்புகளை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தையும் அவர்கள் சுட்டிக்காட்டினர். அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படும் அரசாங்கத்தின் உள்ளூர் உற்பத்தியாளர்களை பலப்படுத்தும் வேலைத்திட்டத்தை அவதானிக்க வேண்டியது அவசியமானது எனவும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வரும் நிவாரணங்கள் கிராமிய மட்டத்திற்கு முறையாக பகிர்ந்தளிக்கப்படுகின்றதா என்பதை கண்காணிக்க அவசர நடவடிக்கை தேவை எனவும் இதன்போ சுட்டிக்காட்டப்பட்டது.

ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் உற்பத்தியாளர்களுடன் துரித வேலைத்திட்டத்தை உருவாக்குவதன் முக்கியத்துவம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெருக்கடி அரசியல் செய்ய வேண்டாம்

நாட்டில் நெருக்கடி நிலைமை ஒன்று உள்ளதை ஏற்றுக்கொள்கிறோம் எனவும், இது அரசியல் செய்யும் நேரம் அல்ல எனவும் தெரிவிக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அனைவரும் நாட்டைப் பற்றி சிந்தித்து, உழைக்க வேண்டிய தருணம் இது எனவும் தெரிவித்தார்.

5,000 குளக்கட்டுகளை புனரமைக்கும் இரண்டாம் கட்டப் பணி, அலரிமாளிகையில் நேற்று முன்தினம் (30) இடம்பெற்றது. அதில், கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், தேசிய உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி விசேட கவனம் செலுத்தியுள்ளது.

இன்று நாம் மிகவும் சிரமப்படுகிறோம். ஒரு நாடாக நாம் ஒரு தொற்றுநோய்க்கு முகங்கொடுத்து வருவதுடன், வரலாற்றில் மிகவும் சவாலான நேரத்தை எதிர்கொள்கிறோம். உள்ளூர்வாதத்திற்கு முன்னுரிமை அளிக்கும் பொருளாதார



மேம்பாட்டுத் திட்டமே எங்கள் நோக்கம் என்றார்.

நாட்டின் பொருளாதாரத்தை நாளுக்கு நாள் வலுப்படுத்துவதே எமது தேவை. இன்று மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதை நாம் அறிவோம். இவை நமக்குத் தெரியாதா? அல்லது அறிந்தும் அறியாதது போன்று உள்ளார்களா என்று சிலர் கேட்கிறார்கள். அதனால்தான் அனைத்துக் கட்சி மாநாட்டைக் கூட்டி நாட்டைப் பற்றி சிந்திக்கவும், அனைவரின் கருத்துகளைக் கேட்டறிந்து, இந்த நிலையிலிருந்து மீண்டெழுவதற்கான தளமொன்றை நிர்மாணித்தோம்.

கொவிட்-19 பெருந் தொற்று நம்மால் உருவாக்கப்பட்டது அல்ல. நாங்களே அதனை செய்தோம் என்று மக்களைத் தூண்டிவிட சிலர் முயற்சிப்பதைப் பார்த்தேன். எதிர்க்கட்சியினரின் நல்ல யதார்த்தமான யோசனைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளோம். இது அரசியல் செய்யும் நேரம் அல்ல. ஒவ்வொருவரும் நாட்டைப் பற்றி சிந்தித்து உழைக்க வேண்டிய தருணம் இது. எனவே, அனைத்துக் கட்சி மாநாட்டில் கலந்து கொள்ளாதவர்களை அடுத்த முறை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறோம்.

புத்தாண்டு காலம் நெருங்குகிறது. உண்மையான பிரச்சினையை பார்த்துக்கொண்டே, நாளை எரிபொருள் இருக்காது. உணவு தட்டுப்பாடு ஏற்படும் என்று பொய்யான மாயைகளை உருவாக்குகிறார்கள். சில பிரச்சினைகள் சிலரின் நலனுக்காக மக்களுக்குத் தெரியாமல் உருவாக்கப்பட்டன. அதனால்தான் கூறினேன், நெருக்கடி இருப்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஓர் அரசாங்கம் என்ற வகையில், உங்களின் சிரமங்களைப் போக்கவும், உங்கள் அன்றாட வாழ்க்கையை கட்டியெழுப்பவும் தேவையான ஆதரவை வழங்குவோம் எனவும் தெரிவித்தார்.







## பாகிஸ்தான் தேசிய தின விருந்துபசார வைபவம்

கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம், பாகிஸ்தான் தேசிய தின விருந்துபசார வரவேற்பு வைபவத்தை கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் கடந்த 29ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன கலந்து கொண்டார்.

பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை ) உமர் ஃபரூக் பர்கி இங்கு உரையாற்றும் போது, பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் தேசிய தினமாக மார்ச் 23 தினத்தை கொண்டாடுவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்ததோடு காந்தாரா மற்றும் பௌத்த மதத்தின் பொற்காலம் தொட்டு இரு நாட்டு மக்களுக்கும் இடையே காணப்படும் உறவை சுட்டிக்காட்டினார்.

## எங்களை சபிக்கின்றனர்

"எமக்கு காதுகள் நன்றாக கேட்கிறது. கண்களும் நன்றாகத் தெரிகிறது" எனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்ஷ, அத்தியாவசிய பொருட்களுக்காக வரிசைகளில் நிற்பவர்கள் ராஜபக்ஷர்களை சபிக்கிறார்கள் என்பது எமக்கு தெரியும் என்றார்.

"நாட்டின் தற்போதைய பிரச்சினைகள் தொடர்பில் நாட்டு மக்களைத் தெளிவுபடுத்த வேண்டும். அதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன" என்றும் அவர் சொன்னார்.

நாட்டின் பிரச்சினைகள் தொடர்பில், மக்களுக்குத்



தெளிவுப்படுத்தவில்லை. அதனால்தான் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. நாட்டின் தற்போதைய நிலைமைகளை கவனமாகக் கையாள வேண்டும். நாட்டில் தற்போது அந்நிய செலாவணி, டொலர் பிரச்சினைகளே காணப்படுகின்றன என்றார்.

## பாவனை கூடிவிட்டது

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது எரிபொருள் பாவனை நாட்டில் 30 - 35 சதவீதமாக அதிகரித்துள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தானத்தில் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

டீசல், பெட்ரோல், விமானங்களுக்கான எரிபொருள் ஆகியவற்றை எந்தவிதமான தடையுமின்றி ஏப்ரல் மாதத்தில் விநியோகிக்க முடியுமென அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களுக்கு மாத்திரம் எரிபொருள் இறக்குமதிக்காக 1.2 பில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. வருடத்தின் எஞ்சிய காலப்பகுதிக்கு எரிபொருள் இறக்குமதிக்காக 5 பில்லியன் ரூபாய் செலவிடப்பட வேண்டும் என்றார்.

கடந்த வருடம் எரிபொருள் இறக்குமதிக்காக வெறும் 2.5 பில்லியன் ரூபாயே செலவு செய்யப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

## பாராளுமன்றுக்கு விஜயம்



பிரான்ஸ் - இலங்கை பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவரும் பிரான்ஸ் பாராளுமன்ற செனட் உறுப்பினருமான ஜொஎல் கெரியோ உள்ளிட்ட பிரான்ஸ் - இலங்கை பாராளுமன்ற நட்புறவுச்சங்க பிரதிநிதிகள் சிலர் இலங்கை பாராளுமன்றத்துக்கு அண்மையில் விஜயம் செய்தனர்.

நட்புறவுச்சங்கத்தின் பிரதித் தலைவி செனட் உறுப்பினர் அனிக் ஜக்மன்ட், சங்கத்தின் உறுப்பினர் அலன் ஹூபர், சங்கத்தின் நிறைவேற்று செயலாளர் ஏன் லோரா உள்ளிட்டோர் இதன்போது கலந்துகொண்டனர்.

பிரதிநிதிகள், சபாநாயகரின் கலரியிலிருந்து பாராளுமன்ற அமர்வை பார்வையிட்டதுடன், இதன்போது தலைமை ஆசனத்திலிருந்த குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், பிரான்ஸ் பிரதிநிதிகளை வரவேற்று சபையில் விசேட அறிவிப்பை மேற்கொண்டார்.

இதனையடுத்து, இரு நாட்டு பாராளுமன்ற நட்புறவுச் சங்கங்களுக்கிடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது. இங்கு பிரதிநிதிகளை வரவேற்று உரையாற்றிய பாரளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், ஏழு தசாப்தங்களாக இலங்கை மற்றும் பிரான்ஸ் இடையில் காணப்படும் வலுவான தொடர்புகளை இருநாட்டு பாராளுமன்ற நட்புறவுச்சங்கங்கள் ஊடாக மேலும் மேம்படுத்த எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.





## உலருணவுப் பொருட்கள்...

சீன-இலங்கை தூதரக உறவு நிறுவப்பட்ட 65ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாகவும், கொழும்பில் வாழும் முஸ்லிம்களுக்கு சீன தூதரகத்தால் புனித ரமழானை முன்னிட்டு உலருணவு பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்: நூருல் ஹுதா உமர்)

## ஜெனரேட்டருடன் வந்ததால் பரபரப்பு

சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கேன்களில் எரிபொருள் நிரப்புவதில்லை என்பதால், கடவத்தையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வர்த்தகர் ஒருவர் மின்பிறப்பாக்கியை (ஜெனரேட்டர்) தள்ளிக்கொண்டு வந்துள்ளார்.

கேன்களில் எரிபொருள் வழங்கப்படுவதில்லை பல மணி நேரம் மின்சாரமும் துண்டிக்கப்படுகின்றது. இதனால், தான் வளர்க்கும் மீன்கள் உயிரிழந்துவிடும். ஆகையால்தான், மின்பிறப்பாக்கியை தள்ளிக்கொண்டு வந்தேன்



எனத் தெரிவித்துள்ளார்.

இவர், மீன் வளர்க்கும் வர்த்தக நிலையத்தை நடத்தும் வர்த்தகர் என்பது குறிப்பிடத்தக்கது.

பேருவளை உள்ளிட்ட பல கிராமப் பகுதிகளில் அலங்கார மீன் வளர்க்கும் தொழிலில் ஈடுபடுவோர் மின்தடையால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். சில வர்த்தகர்கள் தாங்கள் வளர்க்கும் மீன்களை வீட்டுக் கிணறுகளில் விட்டுள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.

## தீர்வை செலுத்தாத தங்கம் சிக்கியது

யாழ்ப்பாணத்தை சேர்ந்த 39 வயதான ஒருவர், தீர்வை வரி செலுத்தாது கொண்டுவந்த 1 கிலோ 430 கிராம் தங்கம், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளது.

பிரான்ஸில் இருந்து நாட்டிற்கு வருகை தந்த ஒருவரே கைது இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

தங்கச்சங்கிலி, நகைகள் உள்ளிட்டவை மிகவும் சூட்சுமமான முறையில், தன்னுடைய பயணப்பொதியில் மறைத்து வைத்து சந்தேகநபர் கொண்டுவந்துள்ளார்.

சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட தங்கம் மற்றும் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இது சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

24 கரட் தங்கப் பவுணின் விலை 200,000 ரூபாயாக 30 ஆம் திகதி உயர்ந்துள்ளதாக கொழும்பு செட்டியார் வீதியிலுள்ள தங்க வியாபாரிகள் தெரிவித்திருந்தனர்.

24 கரட் தங்கத்துக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கை தங்க சந்தையில் 22 கரட் தங்கத்தின் விலை நேற்று (30) காலை வரை 185,000 ரூபாயாக அதிகரித்திருந்தாகவும் குறிப்பிட்டனர்.

அமெரிக்க டொலரின் மதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதாலும், இறக்குமதிக்கான டொலர்கள் கிடைக்காதமையுமே இந்த நிலைக்கு காரணம் என வியாபாரிகள் மேலும் தெரிவித்திருந்தனர்.

## சிக்கிக் கொள்ளாதீர்கள்; நம்பிக்கையை இழக்காதீர்கள்

எதிர்க்கட்சியின் அரசியல் நிகழ்ச்சி நிரலில் சிக்கிக்கொள்ள வேண்டாமென பொதுமக்களிடம் கேட்டுக்கொண்ட அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, அரசாங்கத்தின் மீது தொடர்ந்து நம்பிக்கை வைக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு புதுவருடத்துடன் நீங்கும். இன்னும் சில நாள்களில் இதற்குத் தீர்வுகள் காணப்படும். அத்தியாவசியப் பொருட்களை தேவையான அளவு சேமித்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, வர்த்தகர்களால் விலை உயர்த்தப்பட்ட பொருட்களின் விலைகளிலும் வீழ்ச்சிகள் ஏற்படும். அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு காரணமாக நாட்டு மக்கள் முகங்கொடுக்கும் நெருக்கடி நிலைமைகளை நன்கு அறிந்து வைத்திருக்கிறோம். அரசாங்கத்தின் மீது மக்கள் தொடர்ந்து நம்பிக்கை வைக்க வேண்டும். பிரச்சினைகள் ஓரிரு நாள்களில் தீரும் எனவும் தெரிவித்தார்.



பிளேட்டினால்

# கைகளை வெட்டும் மாணவர்கள்

## வைத்தியர்கள் விளக்கம்



■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றில் சுமார் 20 மாணவர்கள் பிளேட்டினால் தங்களது கைகளைத் தாங்களே வெட்டிக்கொண்டுள்ளார்கள் என சக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர், தரம் ஒன்பதில் கல்வி பயிலும் மாணவர்கள் பலர், பிளேட்டினால் தங்களது கைகளைத் தாங்களே வெட்டியுள்ளனர்.

பின்னர் குருதியை, கடதாசி மூலம் துடைத்துவிட்டு, கிருமிதொற்று நீக்கியைக் காயத்தின் மேல் வீசிறிக்கொண்டதாக நேரில் பார்த்த சக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனைக் குறித்த மாணவர்கள் சாதாரணமாக செய்து கொள்வதாகவும் ஒருவரை ஒருவர் பார்த்து வெட்டிக்கொண்டதன் மூலமே, வெட்டியவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததாகவும் சக மாணவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகள் ஒருவித உளவியல் பிரச்சினையாகக் கூட இருக்கலாம் எனத் தெரிவிக்கும் வைத்தியர்கள், மாணவர்களுடன் உரையாடி ஆலோசனைகள் வழங்க வேண்டும். கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில், ஒரிரு மாணவர்கள் செய்வதைப் பார்த்து ஏனைய மாணவர்களும் இவ்வாறு செய்து கொண்டதாகவும், கட்டிளம் பருவத்தில் மாணவர்கள் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் தெரிவித்துள்ள உளநல மருத்துவர் ம.ஜெயராசா, இவ்வாறு கைகளில் வெட்டிக்கொள்ளும் மாணவர்கள் அனைவரும், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் அல்லர் எனுவும் குறிப்பிட்டார்.

இந்த மாணவர்கள் தங்களது கல்வி நடவடிக்கைகள் நிறைவுற்று வேலை வாய்ப்புகள் முக்கியமாக பொலிஸ், நீதித்துறை, இராணுவம் உள்ளிட்ட பல தொழிற்றுறைகளுக்குச் செல்லும் போது, பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாத

# இயலாமை வெளிப்படுகிறது

## ஆடத்தெரியாதவன் மேடையைக் குறை சொல்வான்

## இம்ரான் எம்.பி சாடல்

■ ஹஸ்பர்



பொருளாதார ரீதியில் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாத தனது இயலாமையை, ஜனாதிபதி கோட்டாபய சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தியுள்ளார் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று (31) வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, கொரோனா தொற்றுக் காரணமாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது போனதாக, கொழும்பில் நடைபெற்ற பிம்ஸ்டெக் மாநாட்டில் உரையாற்றும் போது ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இம்மாநாட்டுக்காக உரையாற்றிய பங்களாதேஷ் பிரதமர் பேகம் ஷேக் ஹஸீனா, கொரோனா தொற்றுக்கு மத்தியிலும் தமது நாடு 6.3 சதவீதம் பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கையும் பங்களாதேஷும் தெற்காசிய நாடுகள். இரண்டுக்கும் கொரோனா பொதுப் பிரச்சினை. இருந்தும் அந்த நாடு பொருளாதாரத்தில் முன்னேறியுள்ளது. நமது பொருளாதாரம் அதாளபாதாளத்தை அடைந்துள்ளது.

போலி விளம்பரங்கள் மூலம் மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்று ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தார். எனினும், அவரால் கொரோனா சவாலை வெற்றி கொள்ள முடியவில்லை.

ஆடத்தெரியாதவன் மேடையைக் குறை சொல்வதைப் போல, பொருளாதாரம் தெரியாத ஜனாதிபதி, அதற்கு கொரோனாவைக் காரணம் காட்டுகின்றார். இதனால் அவர் தோல்வியடைந்ததோடு மட்டுமல்லாது, நாட்டு மக்களையும் பொருளாதாரத்தில் தோல்வியடையச் செய்துள்ளார் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



விலைவாசிக்கு எதிராக

# பொருட்களை சுமந்தபடி கவனயீர்ப்புப் போராட்டம்

■ க.அகரன்





வாழ்க்கைச் சுமை மற்றும் உணவுப் பொருள்களின் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வவுனியா பழைய பஸ் நிலையத்தில் நேற்று (31) மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மண்ணெண்ணை, பெற்றோல், சமையல் விரிவாயு, பானைகள், மின்சார உபகரணங்கள், சமையலறை உபகரணங்களை போன்றவற்றை சுமந்து வந்து இப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

வாழ்க்கைச் சுமை அதிகரிப்பு மற்றும் பொருளாதாரச் சுமைகளை வெளிப்படுத்தும் பதாதைகளையும் ஏந்தியவாறு போராட்டத்தை மேற்கொண்டனர்.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் ஏனைய தமிழ் அமைப்புகளும் இணைந்து இப்போராட்டத்தை மேற்கொண்டிருந்தன.



# பட்டப்பகலில் ஐந்து வீடுகளில் கைவரிசை

## இளைஞன் கைது

■ க.அகரன்

வவுனியாவில் போதைப்பொருள் விற்பனை மற்றும் பட்டப்பகலில் 5 வீடுகளில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 23 வயது இளைஞனை, வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்று முன்தினம் (30) கைது செய்துள்ளனர். வவுனியாவில் கடந்த இரு மாதங்களாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்திருந்தன.

அதன்படி, பண்டாரிக்குளம், உக்குளாங்குளம், வைரவபுளியங்குளம், குமன்காடு, தோணிக்கல் ஆகிய பகுதிகளில் பூட்டப்பட்டிருந்த 5 வீடுகளுக்குள் பட்டப்பகலில் சென்ற திருடர்கள், சமைலறை புகைக்கூடு வழியாக உள் நுழைந்து நகைகள், அலைபேசிகள், கமெரா உள்ளிட்ட பல்வேறு பொருட்கள், பணம் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளதாக வவுனியா பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

முறைப்பாட்டுக்கு அமைவாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.ஏ.எஸ். ஜெயக்கொடியின் வழிகாட்டலில் பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் கற்குழி பகுதியைச் சேர்ந்த மேற்படி இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருடப்பட்ட அலைபேசி, கைக்கடிகாரம், கமெரா, உருக்கப்பட்ட நகைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.



# ஆரோக்கியமான சமூகத்தை நோக்கி

ஊடகவியலாளர் றாசிக் நபாயிஸ் எழுதிய 'ஆரோக்கியமான சமூகத்தை நோக்கி' எனும் கட்டுரைத் தொகுப்பு நூல், கல்முனை மாநகர மேயர் ஏ.எம். றகீபுக்கு, நூலாசிரியரால் நேற்று (31) வழங்கி வைக்கப்பட்டது. மேயர் செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாநகர சபை உறுப்பினர்களான ஏ.ஆர்.அமீர், எம்.எஸ்.எம். ஹாரிஸ் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

(படம்: அஸ்லம் எஸ். மௌலானா)



# பல்வேறு குற்றங்கள்; நால்வர் சிக்கினர்

## வாள், கோடரி, கைக்குண்டு, ஹெரோய்ன் மீட்பு

■ ரீ.எல்.ஜவ்பர்கான், கனகராசா சரவணன்

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில், வாள், கோடரி, கைக்குண்டு, ஹெரோய்ன் போதைப்பொருட்களுடன் நால்வரை, நேற்று (31) கைது செய்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.

மட்டக்களப்பு, மொறக்கொட்டாஞ்சேனை, செங்கலடி, ஐயங்கேணி பிரதேசங்களில் வீடுடைப்பு, கொள்ளை, வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய 'ஐயங்கேணி ஜெயச்சந்திரன் ரீம்' என்ற பெயரில் இயங்கிவந்த குழுவைச் சேர்ந்த நால்வரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவால் மேற்படி பகுதிகளில் பெரும் அச்சுறுத்தல் நிலவி வந்துள்ளதையடுத்து, மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரியின் தலைமையில் பொலிஸ் குழு நியமிக்கப்பட்டு, இரவு வேளைகளில் குறித்த பகுதிகளில் தொடர்ந்து கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், இக்குழுவினர் பதுங்கியிருந்த இடத்தை இன்று காலை முற்றுகையிட்ட பொலிஸார், நால்வரையும் கைதுசெய்து, அவர்களிடமிருந்த கைக்குண்டு, வாள், கோடரி, எட்டு மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் என்பவற்றையும் மீட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள், வவுனியா, ஏறாவூர், ஐயங்கேணி பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்களில் 24, 26 வயதுடைய இருவருக்கு எதிராக வீடுடைப்பு, கொள்ளை, வாள்வெட்டு சம்பவங்கள் தொடர்பாக 19 வழக்குகள் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், முன்னர் புளொட் அமைப்பில் செயற்பட்டு வந்த வவுனியாவைச் சேர்ந்தவரிடமிருந்தே கைக்குண்டு மீட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.




ஆசிரியர்கள் பற்றாக்குறை;

# நிவர்த்திக்குமாறு கவனயீர்ப்பு

■ ஹஸ்பர்

திருகோணமலை கல்வி வலயத்துக்குட்பட்ட முத்து நகர் முஸ்லிம் வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கோரி, பாடசாலைக்கு முன்னால் நேற்று (31) காலை கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

'ஆசிரியர் வேண்டும்', 'ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்', 'ஆசிரியரை மாற்றாதே' போன்ற பதாகைகளை ஏந்தியவாறு, இதில் கலந்துகொண்டோர் கோஷங்களை எழுப்பினர்.

தரம் 09 வரை காணப்படுகின்ற குறித்த பாடசாலையில், தற்போது 06 ஆசிரியர்களே கற்பித்து வருகிறார்கள்.

ஏற்கெனவே 2019 மற்றும் 2020 இல் தலா இரு ஆசிரியர்களும் 2021 இல் மூன்று ஆசிரியர்களும் இடமாற்றப்பட்ட போதிலும் பதில் ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை என சுட்டிக்காட்டுகின்றனர்.

அதிபரை இடமாற்றம் செய்து, தற்போது பதில் அதிபராக ஆறு ஆசிரியர்களில் ஒருவர் கடமையாற்றுவதாலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவனயீர்ப்பில் ஈடுபட்ட பெற்றோர்கள் தெரிவித்தனர்.

வவுனியாவில்

# தந்தை செல்வாவின் ஜனன தினம்



■ க.அகரன்



தந்தை செல்வாவின் 124ஆவது ஜனன தினம், வவுனியாவில் நேற்று (31) அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா, மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள தந்தை செல்வாவின் திருவுருவ சிலையடியில், நகர சபை உறுப்பினர் நா.சேனாதிராஜா தலைமையில், காலை 9 மணியளவில் ஜனன தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு, அன்னாரது நினைவு தூபிக்கு மலர்மாலை அணிவித்துடன், மலர் அஞ்சலியும் செலுத்தியிருந்தனர்.

அதேவேளை, தந்தை செல்வநாயகம் தொடர்பான நினைவுரையை நகர சபை உறுப்பினர் நா.சேனாதிராஜா நிகழ்த்தியிருந்தார்.



இரட்டைவாய்க்காலில்

# வெடிபொருட்கள் மீட்பு

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, இரட்டைவாய்க்கால் பகுதியில் இருந்து போரின் போது கைவிடப்பட்ட வெடிபொருட்கள் சில, நேற்று முன்தினம் (30) மீட்கப்பட்டுள்ளன.

இரட்டைவாய்க்கால் பகுதியில் போரின் போது கைவிடப்பட்ட சில வெடிபொருட்கள் காணப்படுவதாக சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, சிறப்பு அதிரடிப்படையினரால் இவை மீட்கப்பட்டுள்ளன.

கைக்குண்டு, சிறிய ரக எறிகணைகள் மற்றும் ஆர்.பி.ஜி குண்டுகள் என்பன இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய இவற்றை அழிக்கும் நடவடிக்கையில் சிறப்பு அதிரடிப்படையினர் ஈடுபட்டுள்ளார்கள்.

மூன்று பிள்ளைகளின்

# தாய் மார்பில் குத்திக் கொலை

## கணவன் தலைமறைவு

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்



மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள சவுக்கடி கிராமத்தில் மூன்று பிள்ளைகளின் தாயொருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (30) மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், சவுக்கடி முருகன் கோவில் வீதியை அண்டி வசிக்கும் 38 வயதுடைய பெரியான் சிவரஞ்சனா என்பவரே மார்புப் பகுதியில் கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இரத்தம் வழிந்தோடிய நிலையில் அவர் வீட்டு வாசலில் வீழ்ந்து கிடந்துள்ளார். சடலம் உடற்கூறாய்வுப் பரிசோதனைகளுக்காக ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரான பெண்ணின் கணவன் சிவரஞ்சன் தயாளகுமார் (வயது 40), தலைமறைவாகியுள்ளார்.

சிவரஞ்சான அவரது கணவனால் ஏற்கெனவே பலமுறை தாக்கப்பட்டுள்ளார். கொலை செய்யப்படுவதற்கு சில நாள்களுக்கு முன்னர், சிவரஞ்சனாவுக்கு தலையில் ஏற்பட்ட காயத்துக்கு 13 தையல் கட்டுக்கள் இடப்பட்டு, குணமடைந்திருந்தார் எனவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



டிக்கோயா -ஒட்டரி தமிழ் வித்தியாலயத்தில் 2021 ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் மகேந்திரராஜ் சமிக்ஷா 157, கிருஸ்ணகுமார் ருவேதிதா 152, என்டனி ஜூட் மானக்ஷா 150 புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்றுள்ளதாக அதிபர் மதியழகன் தெரிவித்தார். வகுப்பாசிரியை எஸ்.சிவனேஸ்வரி மற்றும் சித்திபெற்ற மாணவர்களையும் படத்தில் காணலாம்.

(எம். கிருஸ்ணா)




2021ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய, காட்மோர் தமிழ் வித்தியாலயத்தில் முதன் முறையாக எட்டு மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

யூ.பிரியலோஷன் 174, டீ.பவீஷ்ணன் 168, எஸ்.பிரணீஸ் எசான் 168, எஸ். ஜானக 152, எஸ்.மனஷேக் 150, எஸ். லக்சிகா 150, எ.மதுமிதன் 149, ஜே.சஸ்மித்தா 148 புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்றுள்ளனர்.

(எம். கிருஸ்ணா)



சாமிமலை - பெயலோன் தமிழ் வித்தியாலய மாணவர்கள், 96 வருடங்களுக்குப் பின்னர் சாதனை படைத்துள்ளனர்.

அதற்கமைய, 41 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி, அதில் 6 மாணவிகள் சித்தி பெற்றனர். ஏனையவர்கள் 70க்கு மேல் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

ஜே.கிருஸ்ணிகா - 162, ஜே.பவித்திரா - 161, ரீ.டிலஜானி - 160, பி.கிருஷாந்தினி - 154, எம். தினேஷ்கா - 151, வீ.ஜே. தில்ருக்ஷி - 150 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர். கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட எந்தனிபோல், திருமதி ஹாயஷாதேவி ஆகிய ஆசிரியர்களுடன், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பகுதி நேர ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவிக்கின்றனர்.



இ.தொ.கா சந்தா பெறாமல்

# புதுப் பாதையில் பயணிக்கும்

## கட்சியின் புதிய தலைவர் செந்தில் வாக்குறுதி

■ எஸ்.கணேசன்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சந்தா பெறாத தொழிற்சங்கமாக எதிர்காலத்தில் மாற்றியமைக்கப்படும் எனத் தெரிவித்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் புதிய தலைவர் செந்தில் தொண்டமான், மலையக மக்களின் உரிமைகளுக்காக காங்கிரஸ் தொடர்ந்தும் குரல் கொடுக்கும் என்றார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபைக் கூட்டம் கொட்டகலையிலுள்ள சி.எல்.எவ் வளாகத்தில் நேற்று முன்தினம் (30) நடைபெற்றது.

இதன் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

“ நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், எமது மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிலிருந்து மக்களை மீட்டெடுப்பது தொடர்பில் தேசிய சபையில் ஆராயப்பட்டது. எமது மக்களின் உரிமைகளுக்காகவும் பொருளாதார எழுச்சிக்காகவும் நாம் தொடர்ந்து தீவிரமாக செயற்படுவோம்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சந்தா பெறாத சங்கமாக மாறவேண்டும் என்பதே மறைந்த தலைவரின் இலட்சியமாகும். அதனை நாம் நிறைவேற்றுவோம். தற்போது சந்தா பெற்றாலும் கணக்கு விவரம் உரியவகையில் காண்பிக்கப்படுகின்றது.

இந்நிலையில், நாடு நெருக்கடிக்கு முகங்கொடுத்து கொண்டிருக்கின்றது. இத்தருணத்தில் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவது சம்பந்தமாக எவ்விதத்திலும் கலந்துரையாடப்படவில்லை என்றார்.

ஹட்டனில்

# மெழுகுவர்த்திக்கு பெரும் கிராக்கி



■ ரஞ்சித் ராஜபக்ஷ

நாடு முழுவதும் அமல்படுத்தப்படும் மின் துண்டிப்பை அடுத்து, உள்ளூர் சந்தைகளில் மெழுகுவர்த்திகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அத்துடன், மெழுகுவர்த்திகளின் விலையும் பாரியளவில் அதிகரித்துள்ளது.

இதற்கமைய, ஹட்டன் நகரில் சிறிய மெழுகுவர்த்தியொன்று 15 ரூபாய்க்கும் பெரிய மெழுகுவர்த்தி 75 ரூபாய்க்கும் விற்கப்படுவதாக தெரிவித்துள்ள நுகர்வோர், மட்டுப்படுத்தப்பட்ட அளவே மெழுகுவர்த்திகள் விற்பனை செய்யப்படுகின்றது என்றும் குற்றஞ்சாட்டினர்.

லயக் குடியிருப்பில்

# 2 வீடுகள் தீக்கிரை

■ ராமு தனராஜா

நமுனுகுல- கனவரல்ல CVE பிரிவில், 11 வீடுகளைக் கொண்ட லயன்குடியிருப்பில் நேற்று (31) காலை 7.40 மணியளவில் தீ பரவியதில், இரண்டு வீடுகள் முற்றாக எரிந்துள்ளன.

தீ பரவுவதை அறிந்த அயலவர்கள், லயத்திலுள்ள ஏனைய வீடுகளுக்கும் தீ பரவாமல் கட்டுப்படுத்தினர். இதனால் பாரிய அனர்த்தம் ஏற்படவில்லை. அத்துடன், சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.



## தீப்பந்தம் ஏந்தினர்

அரசாங்கத்துக்கு எதிராக பன்விலை நகரில், நேற்று முன்தினம் (30) தீப்பந்தம் ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டிருந்தது. பாத்ததும்பர தேர்தல் தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் திலின பண்டார தென்னகோனால் தீப்பந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(மெய்யன், மொஹமட் ஆஸிக்)

பதுளையில்

# 16 புதிய சமாதான நீதவான்கள்



■ எம். செல்வராஜா

பதுளை மாவட்டம் உள்ளிட்ட ஏனைய பகுதிகளின் ஆன்மிகவாதிகள், கல்வியாளர்கள், சமூகவியலாளர்கள் உள்ளிட்ட 16 பேருக்கு, சமாதான நீதவான்களுக்கான நியமனங்கள் நேற்று (31) வழங்கி வைக்கப்பட்டன.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமாரால் வைபவரீதியாக இந்த நியமனங்கள் நேற்று (31) வழங்கப்பட்டன.

நீதி அமைச்சர் அலி சப்ரியிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து, மேற்குறிப்பிட்ட 16 பேருக்கும் சமாதான நீதவான் நியமனங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பொதுக் கூட்டம்

மாத்தளை, இந்து தேசிய கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொது குழு கூட்டம், ஏப்ரல் 16ஆம் திகதி காலை 8.30 மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு அனைத்து பழைய மாணவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர் என்பதுடன், செயலாளர் பதவியை வகிக்க விரும்புவோர், தமது சுயவிவரக் கோவையை ஏப்ரல் 5ஆம் திகதிக்கு முன்னர், பாடசாலை அதிபருக்கு கையளிக்கலாம். மேலதிக விவரங்களுக்கு 2019/ 2020 ஆண்டுகளுக்கான செயலாளர் செல்வேந்திரனுடன் 0779992777 தொடர்பு கொள்ளவும்.

எரிபொருள் பிரச்சினையால்

# பாடசாலை போக்குவரத்து சேவைகளும் ஸ்தம்பிதம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் பிரதேசத்தில் அரச மற்றும் தனியார் பாடசாலைகளின் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்களின் உரிமையாளர்கள், டீசல் இன்மை காரணமாக, நேற்று (31) தொடக்கம் தமது சேவைகளிலிருந்து விலகியுள்ளனர்.

மஸ்கெலியா, பொகவந்தலாவை, கினிகத்தேனை, தலவாக்கலை, கொட்டகலை ஆகிய பகுதிகளிலிருந்து ஹட்டனிலுள்ள பாடசாலைகளுக்கு தினமும் பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட வாகனங்களே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எனவே, தனியார் பஸ்கள், வான்கள் போக்குவரத்து சேவைகளிலிருந்து விலகியுள்ளதால் பாடசாலை மாணவர்கள் பொது போக்குவரத்துகளில் பயணித்தமையை அவதானிக்க கூடியதாகவிருந்தது.

இதேவேளை ஹட்டன் பிரதேசத்திலுள்ள சிபெட்கோ, ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ‘டீசல் இல்லை’ என்ற அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.



இரண்டாவது அகவையில் கால் பதிக்கும்

# மலையக உரிமைக்குரல் அமைப்பு

மலையகத்தின் உரிமைக்குரல் அமைப்பு, தனது முதலாவது அகவையை நேற்று (31) பூர்த்தி செய்தது.

தொழில் நிமித்தமாக கடல் கடந்து சென்றுள்ள மலையக உறவுகள் தாம் உழைக்கும் ஊதியத்தில், சிறு நிதியை தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக ஒதுக்கி பெரும் பங்காற்றி வருகின்றனர்.

அந்த வகையில், கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு, ஹட்டன், கண்டி, நாவலப்பிட்டி, புசஸ்ஸலாவை, கம்பளை, நுவரெலியா, பதுளை என மலையகத்தின் பல பாகங்களிலும் தங்களது உதவி கரங்களை நீட்டி வருகின்றது.




கொவிட்-19 காரணமாக வருமானத்தை இழந்த குடும்பங்கள், பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உதவிகள், மருத்துவ தேவை, விசேட தேவையுடையோருக்கு, பெண் தலைமைத்துவம் வகிக்கும் குடும்பங்களுக்கு, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு என பல்வேறு தளங்களிலும் கடந்த ஒரு வருடத்தில் 65 செயற்றிட்டகளின் ஊடாக உதவிகளை செய்துள்ளது.

அமைப்பின் தலைவி திருமதி கனகாவின் ஆலோசனை, உப தலைவர் திருமூர்த்தியின் வழிநடத்தல், செயலாளர் சிவாவின் தூர நோக்கு சிந்தனை, அமைப்பின் ஏனைய அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடன், இச்செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

# 3 மாதங்களின் பின்னர் கெனியோன் இயங்குகிறது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

மவுசாக்கலை நீர்த் தேக்கத்திலிருந்து கெனியோன் நீர் மின் உற்பத்தி நிலையம் வரை, நீரை ஏந்திச் செல்லும் நிலக்கீழ் சுரங்கப் பாதையில் மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு பணிகளால், கடந்த மூன்று மாதங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த மின்னுற்பத்தி செயற்பாடுகள், நேற்று (31) தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுரங்கப் பாதையின் பராமரிப்பு பணிகள் வேறொரு பகுதியூடாக நீரை கொண்டு செல்லும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. பராமரிப்பு பணிகள் நிறைவடைந்ததை அடுத்து மின் உற்பத்தி செயற்பாடுகள் நேற்றிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

“கெனியோனில் இருந்து 60 மெஹாவோட் கொள்ளளவு மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைகிறது” என, அந்த நீர் மின் உற்பத்தி நிலையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



# தன்னையே உருக்கும் மெழுகுவர்த்தியை அணைத்துவிடாதீர்கள்

'ஒன்று' இல்லையென்றால்தான், அதைப் பிரதியீடு செய்யும் பொருளின் அருமை விளங்கும். நெருக்கடியான நிலைமை வழமைக்குத் திரும்பிய உடனேயே, பிரதியீட்டை மூலையில் வீசிவிடுவர்.

சிலவற்றுக்கு பதிலீடு செய்யவே முடியாது. ஆனால், மாற்றீடுகளைப் பற்றிச் சிந்திக்கலாம். வாகனத்துக்கு பெட்றோல் நிரப்புவதில் சிக்கலெனில், பதிலீடாக டீசலை நிரப்ப முடியாது. எனினும், மாற்றீடாக, பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தலாம். அண்மைய தூரத்துக்குச் சென்றுதிரும்புவோர் நடந்தும் செல்லலாம்.

காஸ் விலை அதிகரிப்பை அடுத்து, மண்ணெண்ணெய் அடுப்பை கொள்வனவு செய்தனர். காஸ் பற்றாக்குறையின் போது, மின்சார அடுப்பை கொள்வனவு செய்தனர். இப்போது, மின்வெட்டு அமலில் இருப்பதால், இரண்டும் கெட்டான் நிலைமையில் 'விழிபிதுங்கி' நின்கின்றனர்.

காஸ் தட்டுப்பாடும் மின்வெட்டும், ஏககாலத்தில் வாட்டி வதைக்கிறது. மின்வெட்டுக்கு மாற்றீடாக, மின்பிறப்பாக்கியை பயன்படுத்துவதிலும் சிக்கல். ஏனெனில், எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. மண்ணெண்ணெய் விளக்குகளையும் பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மாற்றீடாக, மெழுகுவர்த்தியை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. அதாவது, மெழுகுவர்த்திக்கான கேள்வி நாளுக்கு, நாள் கூடிவிட்டது. குறுகிய நேரத்துக்குள் உருகியும் விடுகின்றது. விலையும் அதிகரித்து விடுகின்றது. தன்னை உருக்கிக்கொள்ளும் மெழுகுவர்த்தியே பலருக்கு ஒளி கொடுத்துக்கொண்டிருக்கின்றது. அதிலும் கையை வைத்து, அணைத்துவிட வேண்டாம்.

அதாவது, மெழுகுவர்த்தியேனும், இந்த நெருக்கடியான காலக்கட்டத்தில் குறைந்த விலையில், நின்று எரியக்கூடிய வகையில், தயாரித்து வழங்கவேண்டும். அரசியல் இலாபம் தேடுவதைப் போல, உருகும் மெழுகிலும் இலாபத்தைத் தேட முயற்சிக்கக் கூடாது.

மின்வெட்டு, தண்ணீர் வெட்டு, வரிசையில் நிற்பது, ஒருவேளை உணவைத் தவிர்த்தல் என்பவற்றுக்குப் பழக்கப்பட்டவர்கள், எல்லாவற்றையும் சமாளித்துக்கொண்டு போய்விடுவர். நகர்புறங்களில் மின்விசிறிக்கு பழக்கப்பட்டவர்கள், பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

மின்வெட்டு ஒருபுறமிருக்க, நுளம்புகளின் தொல்லையும் அதிகரித்துள்ளது. திருடர்களும் கைவரிசையை மிக இலாவகமாக காட்டத்தொடங்கிவிட்டனர். மின்சாரம் இன்றி, சில மணித்தியாலம் ஒளிகொடுக்கும் மின்குமிழ்கள், மின்விசிறி, டோர்ச் லைட் ஆகியவற்றின் விலைகளும் தலைக்குமேல் எகிறி நிற்கின்றன.

நெருக்கடியான நிலைமையின் போது, ஒருவரையொருவர் பாதுகாத்து அரவணைத்துச் செல்லவேண்டுமே தவிர, அதில் குளிர்காய்ந்து இலாபம் தேட முயற்சிக்கக் கூடாது.

பெரும் நகரங்களில் சொந்த வீடு இருந்தாலும், பலபக்க நெருக்கடியால், முறையாகச் சமைக்க முடிவதில்லை. ஹோட்டல்கள் பல இழுத்து மூடப்பட்டுவிட்டன. வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தவர்கள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டனர். தொழில்நிமித்தம் நகரங்களில் தங்கிவாழ்வோர், முறையான உணவின்றி உருகிக்கொண்டிருக்கின்றனர்.

இதற்கிடையே பல இடங்களில், வெளிச்சத்தின் உடனடித் தீர்வான மெழுகுவர்த்திக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக அறியமுடிகின்றது. பாமர மக்களுக்கு ஒளிகொடுக்கும் மெழுகுவர்த்தியை, அணைத்துவிடாதீர்கள் என வினயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

மனிதர்கள் தாங்கள் செய்த பாவபுண்ணியங்களைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. அவைகளை முழுமையாக ஞாபகம் வைத்திருக்கவும் முடியாது.

ஆனால், தாங்கள் செய்த புண்ணிய செயல்களை வருடம், மாதம், திகதி என்பவற்றின் அடிப்படையில் சொல்லிவிடுவதுமுண்டு.

எந்த உயிர்களையும் இம்சிப்பது, வதைப்பது மகாபாவம். உயிர்கள் அனைத்தும் உலகுக்கு உரியன. மனிதர்களுக்கு ஆணவம், அகந்தை அகல்வதில்லை. பொய்களைச் சொல்பவர்கள், மெய்களைச் சொல்லத் தயக்கம் காட்டுகின்றனர். அது ஏன்? வாய்மையுள்ளவர்களை வையகம் போற்றுகின்றது. இரக்கம், அன்பு ஓங்கினால், பாவங்கள் என்பதே உலகில் நடக்காது.

தற்செயலாகத் தவறுகள் செய்பவர்களை விட, வேண்டுமென்றே தொடர்ந்தும் தவறுகள் செய்பவர்களும் உண்டு.

நிம்மதியான வாழ்வை அமைக்க, நீதி, நெறியுடன் கூடிய முறையில் வாழ்ந்தேயாக வேண்டும். எவரையும் வருத்துதல் ஆகாது!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

ஸ்ரீ லங்கா முதல் சிங்கலே வரை – 13

# தரப்படுத்தல்: பார்க்கத் தவறிய பக்கங்கள்



தெ. ஞாலசீர்த்தி
மீநிலங்கோ

தமிழர்கள் மத்தியில், தரப்படுத்தல் ஓர் எதிர்வினையை உருவாக்கியதன் பின்னால், வலுவான காரணங்கள் இருந்தன. தரப்படுத்தல் வெறுமனே, 1970ஆம் ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சை முடிவுகளின் விளைவு மட்டுமல்ல! இதற்கான, நீண்டகால சமூகக் காரணிகள் பலவுண்டு.

தரப்படுத்தல் பற்றிப் பேசுவோர், இவை குறித்துப் பேசுவது அரிது. இவை பற்றி விரிவாக நோக்குவது, சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கை சமூகங்களின் இருப்பையும் இயல்பையும் இயக்கத்தையும், குறித்தவொரு சித்திரத்தைத் தரவல்லன.

இலங்கையின் புவியியல் நிலைமைகள், விவசாயம், தொழிற்துறை ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உகந்ததாக இருந்தபோதும், வடக்கில் போதுமான நிலங்கள் இல்லாமையும் நீடித்துவந்த நிலப்பிரபுத்துவத்தின் எச்சங்களும், ஆங்கிலேயர் காலத்தில் தமிழர்கள், கல்வியைத் தங்கள் வாழ்வுக்கான பிடிமானமாகக் கொண்டனர்.

அமெரிக்க, பிரித்தானிய மிஷனரிகளின் வருகை, இலங்கையின் வடபுலத்தில் தரமான கல்விக்கும் ஆங்கில அறிவுக்கும் வாய்ப்பானது. இந்த வாய்ப்புகள் மூலம் தமிழ்ச் சமூகத்துக்கு, இலங்கையில் அரச சேவைகளில் வேலைவாய்ப்பு பெற வழி பிறந்தது.

இதன் காரணமாக, அரசு பணிகளில் தமிழர்கள் அதிக அளவில் முக்கிய பதவிகளை வகிக்க முடிந்தது. கொலனிய இலங்கையில், தமிழ் மக்கள் தொகை விகிதாசாரத்தை விட, அதிக எண்ணிக்கையில் அரசாங்க வேலை வாய்ப்புகளைப் பெற்றனர்.

இதை மாற்றியமைக்கும் முனைப்புகள், சுதந்திர இலங்கையில் தொடங்கினாலும், 1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம், அதற்கு புதிய வடிவத்தையும் வாய்ப்பையும் கொடுத்தது. அரசின் பிரதான கொள்கைகளில் ஒன்றாக, 'சிங்களவர்களுக்கு முன்னுரிமை' என்ற சிந்தனை வலுப்பெறத் தொடங்கியது.

கல்வி ரீதியாகச் சிறுபான்மையினரைக் குறிவைப்பது குறித்துப் பேசப்பட்டாலும், அது, மைய அரசியல் நீரோட்டத்தின் பகுதியாகவில்லை. இப்பின்னணியிலேயே 1970களில் அறிமுகமான பல்கலைக்கழக அனுமதிக்கான புதிய முறைகள், இலங்கையின் முக்கிய தருணத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

இது சமூக நீதியின் முன்னோடியான செயற்பாடல்ல. பல்கலைக்கழக அனுமதிக்கான அளவுகோல்களில் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்கள் குறித்த எதிர்வினைகள், சிங்கள சமூகத்துக்கு எதிரான, உறுதியான நடவடிக்கைகள் என நியாயமற்ற முறையில் விளங்கப்பட்டது. இது உயர்கல்வியில் நிரந்தர நெருக்கடி நிலைமைக்கு வழிவகுத்தது. அவற்றின் தாக்கம், மிகவும் சிக்கலானதாகவும் பிராந்திய ரீதியாகவும் இன ரீதியாகவும் வர்க்க ரீதியாகவும் வேறுபட்டிருந்தது.

முதலில் அறிமுகமான தரப்படுத்தலின் நியாயமின்மையை உணர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், தரப்படுத்தல் நியாயமற்றதுடன் பெரும்பான்மை சமூகத்துக்குச் சார்பானது என்ற பார்வையை மாற்றவில்லை.

இலவசக் கல்வியின் விளைவாக, 1960களின் பிற்பகுதியில், இலங்கை கிட்டத்தட்ட முழுமையான கல்வியறிவை அடைந்தது. வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்காக, 1959ஆம் ஆண்டு தொடக்கம் சிங்களம், தமிழ் மொழிகளில் பல்கலைக்கழகக் கல்வி கிடைக்கப்பெற்றது. இருப்பினும் ஏற்றத்தாழ்வுகள் மறையவில்லை.

'கற்பித்தல் மொழிகளில் ஏற்பட்ட மாற்றம் மற்றும் பல்கலைக்கழக முறைமையின் விரிவாக்கம், கிராமப்புற சிங்கள பௌத்தர்களுக்கு அளவு அடிப்படையில் பயனளித்தது. ஆனால், தரமான அடிப்படையில் அல்ல' என்பதை, பல ஆய்வுகள் சுட்டிக் காட்டியுள்ளன. சமூக விஞ்ஞான கற்கைகள் மற்றும் மனிதநேய கற்கைநெறிகளைப் போன்று அல்லாமல், வேலைவாய்ப்புக்கான சிறந்த வாய்ப்புகளை வழங்கும் விஞ்ஞான திட்டங்களில், சிங்கள மாணவர்கள் இன்னும் குறைவாகவே பிரதி நிதித்துவப்படுத்தப்பட்டனர்.

1970ஆம் ஆண்டில் ஒரு சதவீத இளைஞர்கள் மட்டுமே, பல்கலைக்கழகங்களுக்குள் நுழைந்தனர். குறிப்பாக, பொறியியல், மருத்துவம் ஆகிய துறைகளில் பல்கலைக்கழகத்துக்கு நுழைவதில், மிகப்பெரிய சமூக கௌரவம் இருந்தது. பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில், மாணவர்களின் பரீட்சை முடிவுகளில், இடைநிலைப் பாடசாலைகளின் தரத்தின் அடிப்படையில், தெளிவான பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் இருந்தன.

இடைநிலைப் பாடசாலைகள், தென்மேற்கு கரையோரத்தில் (கீழ்நாட்டு சிங்களவர்கள் வசிக்கின்ற) மற்றும் யாழ்ப்பாண தீபகற்பத்தில் அதிகம் காணப்பட்டன.

இதற்கு நேர்மாறாக, உள்நாட்டில் முக்கியமாக, கண்டி சிங்களவர் மற்றும் முஸ்லிம்கள் (அவர்களில் பலர் கிழக்குக் கரையோரத்தில் வாழ்ந்தவர்கள் அல்லது தீவின் பிற பகுதிகளில் சிதறி வாழ்ந்தவர்கள்) ஆகியோருக்கு இடைநிலைக் கல்விக்கான வாய்ப்புகள் குறைவாகவே இருந்தன.

1960 வரை, அனைத்துப் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுகளும் ஆங்கிலத்தில் இருந்தன. இதனால் பல்வேறு இனக்குழுக்களின் மாணவர்களுக்கு, விருப்பமான வாய்ப்புகள் குறைந்தன. இடைநிலைப் பாடசாலைகளில் கற்பித்தல் மொழி ஆங்கிலத்திலிருந்து சிங்களம், தமிழ் ஆகிய சுதேச மொழிகளுக்கு மாறியபோது, இடைநிலைப் பாடசாலைகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டது.

பல்கலைக்கழக கல்விக்கான தேவையைப் பூர்த்தி செய்ய, இரண்டு புதிய பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டன. எவ்வாறாயினும், பல்கலைக்கழக மட்டத்தில் விரிவாக்கம் முக்கியமாக, கலை மற்றும் மனிதநேயங்களுடன் மட்டுமே இருந்தது. அதேநேரத்தில், பல்கலைக்கழக நுழைவுக்கான போட்டியின் பெரும்பகுதி, அறிவியல் அடிப்படையிலான படிப்புகளில் நுழைவதாக இருந்தது.

1970களில், க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்திய 70சதவீதமான பாடசாலைகளில், உயர்தர மட்டத்தில் அறிவியலைக் கற்பிக்கக்கூடிய வகுப்புகள் இருக்கவில்லை. அதேநேரத்தில், இனக்குழுக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. பல்கலைக்கழகத் தேர்வில் அறிவியல் பாடங்களில், தமிழர்கள் குழுவாகச் சிறப்பாகச் செயற்பட்டனர்.

இதற்குப் பல காரணங்கள் இருந்தன: ஆங்கிலத்தில் அதிக கல்வியறிவு, யாழ்ப்பாணத்தில் அறிவியல் கற்பிப்பதற்கான விரிவான வசதிகள், வாழ்வாதாரத்துக்கான வேறு வாய்ப்புகள் இல்லாத பகுதியில் அறிவியலைக் கற்க உந்துதல், சனத்தொகையில் 12 சதவீதமான இலங்கை தமிழர்கள், 1970 இல் 35.3சதவீத விஞ்ஞான அடிப்படையிலான பாடநெறிகளுக்கு அனுமதி பெற்றனர்.

பொறியியல் துறையில் 40.8சதவீத இடங்களும் மருத்துவத்தில் 40.9சதவீத இடங்களும் அவர்களுக்குக் கிடைத்தன. மாறாக, சனத்தொகையில் 75சதவீதமான சிங்களவர்கள், விஞ்ஞான அடிப்படையிலான பாடநெறிகளுக்கு 60.6சதவீத அனுமதியைக் கொண்டிருந்தனர். இதில் 55.9சதவீத பொறியியல் மற்றும் 53.5சதவீத இடங்கள் மருத்துவத்தில் அடங்கும்.

1970ஆம் ஆண்டின் பிற்பகுதியில் முதன்முதலில் நடைமுறைப்படுத்தப்பட்ட தரப்படுத்தலின் விளைவால், மருத்துவ பீடத்துக்கான வெட்டுப்புள்ளி, சிங்கள மூலமானவர்களுக்கு 229 ஆகவும், தமிழ் மூலமானவர்களுக்கு 250 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட மாணவர் சிங்களவரா அல்லது தமிழரா என்பதைப் பொறுத்து, ஆங்கில மூலத்திற்கும் இதே குறைந்தபட்ச மதிப்பெண்கள் பயன்படுத்தப்பட்டன.

எவ்வாறாயினும், மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் இந்த முறை அடுத்த ஆண்டே கைவிடப்பட்டது. தமிழர்களில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாவோரின் அளவில், மாற்றங்கள் பெரிதாக நிகழவில்லை. மாறாக, அரசாங்கம் எதிர்பார்த்த சிங்களவர்களை அதிகளவில் பொறியியல், மருத்துவக் கல்விக்கு அனுமதிப்பது சாத்தியமாகவில்லை. எவ்வாறாயினும், பேரினவாதத்தின் அரசியல் அதிகாரம், சிறுபான்மையினரைப் பழிவாங்குவதற்குக் களமிறங்கியுள்ளது என்பதை உணர்ந்த தமிழரின் எதிர்ப்புணர்வு முக்கியமானது.

தரப்படுத்தல் என்பது, தமிழர்கள் தங்கள் சொந்த மாணவர்களுக்கு அதிக மதிப்பெண்கள் கொடுத்து ஏமாற்றுகிறார்கள் என்ற இனவெறி குற்றச்சாட்டுகளுக்கு தவறானதும் அவசரமானமான பதில் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்கமுடியாது.

அறிவியல், மருத்துவப் படிப்புகளில் தமிழ் மாணவர்களின் 'நியாயமற்ற' நுழைவு என விவரிக்கப்பட்டதை மட்டுப்படுத்துவதே அதன் நோக்கம் என்பது புலனானதோடு, அது வெளிப்படையாகவும் சந்தேகத்துக்கு இடமின்றியும் சிங்கள நடுத்தர மாணவர்களுக்கு அதிக இடத்தை வழங்குவதாகவும் இருந்தது.

ஒரு வருடம் கழித்து, ஒரு புதிய திட்டம் நடைமுறைக்கு வந்தது. அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலச்சூழல் முக்கியமானது. மாற்றங்கள், 1971 ஜே.வி.பி கிளர்ச்சியின் விளைவிலானவை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இக்கிளர்ச்சியில் பங்கேற்றவர்களில் பெரும்பாலானோர் படித்த, வேலையற்ற சிங்கள இளைஞர்கள். கல்வி முறையானது, சமூக மேல்நிலையாக்கத்தை எளிதாக்குவதிலும், உயரடுக்கு குழுக்களுக்கான கல்வி அணுகலை வழங்குவதிலும் பங்கை வகிக்கவில்லை என்று ஜே.வி.பியினர் உணர்ந்தனர்.

ஜே.வி.பி கிளர்ச்சியால், கிராமப்புற சிங்கள நடுத்தர வர்க்கத்தினரின் எதிர்பார்ப்புகளை அரசாங்கம் கவனத்தில் கொண்டது. இது இலங்கையின் கல்விமுறையில் இன்னோர் அத்தியாயத்தைத் தொடக்கிவைத்தது.

## கடிதங்கள்

மின்சாரம் துண்டிப்பு:

### பாதிப்பில் ஆடை தொழிற்சாலை

தொடர்ச்சியாக மின்சாரம் துண்டிக்கப்படுவதால், ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

லிந்துலை - தலவாக்கலை மின்சார சபைக்கு உட்பட்ட டயகம, அக்கரப்பத்தனை, பசுமலை, லிந்துலை, மெராயா ஆகிய பகுதிகளில் கடந்த இரண்டு நாள்களாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதன் காரணமாக, பசுமலை நகரத்தில் இயங்கும் ஆடை தொழிற்சாலை முடங்கியது. இங்கு 150க்கும் மேற்பட்ட ஊழியர்கள் தொழில் செய்கின்றனர்.

இங்கு வேலை செய்யும் ஊழியர்கள் தெரிவிக்கையில், தற்போது மின்சாரம் துண்டிக்கப்படுவதால், தொடர்ந்து வேலையில்லாத காரணத்தால், வருமானத்தை இழந்துள்ளோம். பஸ்ஸூக்கு அதிக கட்டணம் செலுத்தி, தொழிலுக்கு வந்து, ஏமாற்றத்துடன் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது. விலைவாசி அதிகரித்திருக்கும் தற்போதைய நிலையில், இதனால் தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டுகின்றனர்.

இரவு நேரத்தில் மின்சாரம் வழங்கப்படுவதால், குடும்பத்தை விட்டுவிட்டு இரவில் தாம் எவ்வாறு, ஆடைத் தொழிற்சாலைக்கு வந்து தொழில் செய்வது எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, ஆடைத் தொழிற்சாலைக்கு, மின்சாரத்தை இடை நிறுத்தாமல் தொடர்ந்து வழங்க, மின்சார சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

துவாரக்ஷான்





கொமர்ஷல் வங்கி அட்டைதாரர்களுக்கு

# பெரும் விலைக்கழிவுகள்

கொமர்ஷல் வங்கி இந்தப் புத்தாண்டை முன்னிட்டு, தனது கார்ட் உரிமையாளர்களுக்கு 50% கழிவு மற்றும் கிரடிட் கார்ட் வைத்திருப்பவர்களுக்கு இலகு தவணை கொடுப்பனவு என்பனவற்றை சுமார் 3,500 வர்த்தக நிறுவனங்கள் ஊடாக வழங்க முன்வந்துள்ளது.

சுய தேவைகளுக்காகவோ அல்லது பரிசு வழங்கும் நோக்கிலோ பாவிக்கக் கூடிய பல்வேறு பண்டிகைக் கால தேவைகளை உள்ளடக்கியதாக இவை அமைந்துள்ளன. மார்ச் 20ஆம் திகதி முதல் குறிப்பிட்ட திகதிகளில் அல்லது குறிப்பிட்ட காலப் பகுதியில் டெபிட் மற்றும் கிரடிட் கார்ட் பாவிப்பவர்களுக்கு சுமார் 3,500 பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிலையங்களில் 2022 ஏப்ரல் 15 வரை பாவிக்கக் கூடியதாக இந்தச் சலுகைகள் வழங்கப்படவுள்ளன என்று வங்கி அறிவித்துள்ளது.

இதேவேளை, கிரடிட் கார்ட் கொள்வனவுகளுக்கு 60 மாத கால இலகு தவணை கொடுப்பனவுத் திட்டமும் வழங்கப்படும். இந்தத் தெரிவு வர்த்தகருக்கு வர்த்தகர் மாறுபட்டதாகவும் இருக்கும்.

புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்கான பொருள் கொள்வனவில் மகிழ்வூட்டும் வகையில் இந்தத் தெரிவுகள் அமைந்துள்ளன. தேவையான துணிமணிகளை வாங்கவும், நண்பர்களுக்கு பரிசுகளை வழங்கவும், வீட்டுப் பாவனைப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள் என்பன உட்பட இன்னோரன்ன கொள்வனவுகளுக்கும் இந்தச் சலுகைகள் பெரும் துணையாக இருக்கும் எனவும் வங்கி மேலும் அறிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியின் கிரெடிட், டெபிட் அட்டைகளும், வருடம் முழுவதற்குமான பல்வேறு வகையான சேவைகளுக்கான ஊக்குவிப்புகளை வழங்குகின்றன. மெக்ஸ் லோயல்டி வெகுமதித் திட்டத்தின் கீழ், கடனட்டைகளுக்கும் டெபிட் அட்டைகளுக்கும் வெகுமதிப் புள்ளிகளை வழங்கிய முதலாவது வங்கி, கொமர்ஷல் வங்கியாகும். அதேபோல், வழக்கமாகக் கடனட்டைகளுக்கு மாத்திரம் வழங்கப்படும் ஊக்குவிப்பு விலைக்கழிவுகளை, டெபிட் அட்டைகளுக்கும் கொமர்ஷல் வங்கி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை ரயில்வே திணைக்களத்தின்

# ஆசன முற்பதிவு சேவை அறிமுகம்

ஒரு தசாப்த காலப்பகுதிக்கு மேலாக இலங்கை ரயில்வே சேவையின் தொழில்நுட்ப பங்காளர் எனும் வகையில், SLT-MOBITEL மற்றும் இலங்கை ரயில் சேவை ஆகியன மற்றுமொரு முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல் சாதனையை அண்மையில் ஏற்படுத்தியிருந்தன. ரயில்ப் பயணிகளுக்கு தமது பயண ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளும் இணையத்தளம் மற்றும் மொபைல் app ஆகியவற்றை இலங்கையில் முதன் முறையாக அறிமுகம் செய்துள்ளது.

தேசிய போக்குவரத்து சேவை வழங்குநர் எனும் வகையில், இலங்கை ரயில்வே திணைக்களத்தால் பயணிகளுக்கு சிறந்த பிரயாண அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எப்போதும் முயற்சிக்கப்படுகின்றது. இந்நிலையில் SLT-MOBITEL உடன் இணைந்து 'ஒன்லைன் ஆசன முன் பதிவுக் கட்டமைப்பு' அறிமுகத்தினூடாக, நவீன தொழில்நுட்ப பிரயாண வசதிகளிலமைந்த பிரயாணத்தை வழங்குவதை உறுதி செய்துள்ளது.

2009 ஆம் ஆண்டில் தேசிய மட்ட ரயில்வே ஆசனப் பதிவு கட்டமைப்பொன்றை நிறுவிய முதலாவது சேவை வழங்குநராக SLT-MOBITEL மொபைல் திகழ்கின்றது. புதிய சேவையினூடாக, பொது மக்களுக்கு தமது ரயில்ப் பயண ஆசன முற்பதிவுகளை எங்கிருந்தும் எவ்வேளையிலும் மேற்கொள்ளும் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

SLT-MOBITEL மொபைல் இனால் இந்தக் கட்டமைப்பு முதன் முதலில் அறிமுகம் செய்யப்பட்ட போது தொலைபேசி ஊடாகவும், சேவை வழங்கும் கருமபீடங்களினூடாகவும் ரயில் பிரயாண முற்பதிவு முறையை ரயில் பயணிகளுக்கு பெற்றுக் கொள்ள முடிந்தது.

அத்துடன், இலங்கை ரயில்வே திணைக்களத்துக்கும் ஆளியக்கக் கட்டுப்பாட்டு முறையிலும் சீராக்கல் செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு உதவியிருந்தது. நாடு முழுவதிலும் சகல பகுதிகளையும் சேர்ந்த 50க்கும் அதிகமான ரயில் நிலையங்களை இணைக்கும் வகையில் தன்னியக்கமயமான ரயில் டிக்கட் முற்பதிவு கட்டமைப்பு அமைந்துள்ளது.



இலங்கை ரயில்வே திணைக்களம் போன்ற பொது நிறுவனமொன்று LANKAQR ஐ பயன்படுத்தி டிஜிட்டல் மயமாக்கத்தை முழுமையாக பின்பற்ற ஆரம்பித்துள்ளமை இது முதன் முறையாக அமைந்திருப்பதுடன், இது இலகுவானதாகவும், பாதுகாப்பானதாகவும், வாடிக்கையாளர்களுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு அமைந்துள்ளது. இதனூடாக வாடிக்கையாளர்களுக்கு தமது விரல் நுனிகளினூடாக பயண டிக்கட்களை இலகுவாக முற்பதிவு செய்து கொள்ள முடியும்.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள QR குறியீட்டு உறுதிப்படுத்தலுடனான e-டிக்கட்கள் விநியோகத்தைக் கொண்டதாக இந்த கட்டமைப்பு அமைந்துள்ளதுடன், இதனூடாக இலங்கை ரயில்வே திணைக்களத்துக்கு கடதாசி பாவனையற்ற பிரிவாக இயங்குவதற்கு வழிகோலும். முற்பதிவுக்கு அனுமதிக்கப்பட்ட சகல 1ஆம் வகுப்பு ஆசனங்கள், பார்வையிடல் பெட்டி, 2ஆம் வகுப்பு, 3ஆம் வகுப்பு ஆசனங்களை சகல பகுதிகளுக்கு பிரயாணம் செய்வதற்காக சில நிமிடங்களில் பதிவு செய்து கொள்ளலாம். கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், Visa, MasterCard மற்றும் LankaQR ஊடாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் முடியும். முற்பதிவு செய்யப்பட்ட டிக்கெட்களை அருகாமையிலுள்ள mTicketing சேவையை கொண்டிருக்கும் ரயில் நிலையத்திலிருந்து, உங்கள் ஆசன பதிவு குறியீட்டை இலக்கத்தை தெரிவித்து தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டை காண்பித்து முன்கூட்டியே பெற்றுக் கொள்ளலாம்.

தேசிய தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப சேவை வழங்குநர் எனும் வகையில் தேசிய மட்ட செயற்றிட்டங்களுக்கு ஆதரவளிப்பதில் பெருமளவு முன்னுரிமை வழங்குவதுடன், இலங்கையர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றி, நாட்டுக்கு சேமிப்புகளை ஏற்படுத்தி, அதன் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கின்றது.

## 'ஹேக் லைக் எ கேர்ள்'

தொழிற்துறைக்கான இலங்கையின் தேசிய அமைப்பான SLASSCOM அதன் Women Technopreneurs Forum மூலம் IFC மற்றும் ஜப்பான் அரசாங்கத்துடன் இணைந்து, தொழில்நுட்பத் துறையில் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் நோக்கத்துடன், பெண்கள் டெக்னோப்ரினேர்களை மையமாகக் கொண்ட ஒரு தனித்துவமான ஹேக்கத்தானை அண்மையில் ஏற்பாடு செய்தது.







இந்தியா

# விமானக் கட்டண குறைப்பு

இந்தியாவில் இருந்து டுபாய் செல்வதற்கான விமானக் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் சர்வதேச விமான சேவைகளுக்கு மத்திய அரசு அனுமதி அளித்ததை தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையே இயக்கப்படும் விமான சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடெல்லியில் இருந்து செல்லும் விமானங்களில் அதிகபட்ச கட்டணமாக இந்திய மதிப்பில் 30,000 ரூபாயில் இருந்து 16 ஆயிரம் ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ரமழான் மாதத்தில் பயணம் செய்ய விரும்புகிறவர்களுக்கு விமானப் போக்குவரத்து நிறுவனங்கள் பல்வேறு கட்டணச் சலுகைகளை அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவை

# குப்பைக்கும் வரி



கோவை மாநகராட்சியின், 2022-23ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்ட அறிக்கை தாக்கல் செய்யும் நிகழ்ச்சி, நேற்று முன்தினம் (30) நடைபெற்றது.

இதன்போது குடிநீர், வீதி வசதி, பாதாள சாக்கடை திட்டம் செயற்படுத்துதல், தெருவிளக்குகள் அமைத்தல், குப்பை மேலாண்மை, நகர் நல மையம் கட்டுதல், இணைப்பு சாலை உருவாக்குதல் உள்ளிட்ட பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் சொத்து வரியுடன் குப்பை வரியும் வசூலிக்கப்படும் எனவும் இதன் மூலம், 13.18 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்படும் எனவும் குறித்த வரவு செலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தெலுங்கானா

# பாடசாலையில் ஆசிரியர் போதையில் குறட்டை




தெலுங்கான மாநிலத்தில், தலைக்கேறிய போதையில் ஆசிரியர் பாடசாலையில் உறங்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தெலுங்கான மாநிலம் மகபூப் நகர் மாவட்டத்தில் உள்ள அரச பாடசாலையில் பணிபுரியும் ஆசிரியர், இவ்வாறு வகுப்பறையில் உறங்கியுள்ளார்.

கடந்த ஆறு மாதங்களாக குறித்த பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றிவரும் அவர், நீண்ட நாள்களாக மது அருந்தி விட்டு பாடசாலைக்கு வந்து உறங்குவதை வாடிக்கையாக வைத்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், இது குறித்து மாணவர்கள் தங்களின் பெற்றோரிடம் தெரிவித்ததையடுத்து , அவரது வகுப்பறைக்குச் சென்ற நபர் ஒருவர், மதுபோதையில் நாற்காலியில் படுத்து தூங்கிக்கொண்டிருந்த ஆசிரியரை எழுப்ப முயற்சித்துள்ளார்.

இது குறித்து, புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகியமையை அடுத்து, குறித்த ஆசிரியரை பணி நீக்கம் செய்து, வேறோர் ஆசிரியரை நியமிக்க வேண்டும் என்று, மாவட்ட கல்வி அலுவலகருக்கு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெலுங்கானா

100 நாய்களைக் கொலை செய்து

# கிணற்றில் வீசிய கொடூரம்

100க்கும் மேற்பட்ட தெரு நாய்களை விஷம் கொடுத்து கொலைசெய்து, கிணற்றில் வீசிய சம்பவம் தெலுங்கானாவில் இடம்பெற்றுள்ளது.

தெலுங்கானாவின் சித்திபேட் மாவட்டம் திகுல் கிராமத்தில் நீண்ட காலமாக தெரு நாய்களின் தொல்லை அதிகமாகக் காணப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து நேற்று முன்தினம் (30) அக்கிராமத்தில் 100க்கும் மேற்பட்ட தெரு நாய்கள் விஷம் கொடுத்து கொல்லப்பட்டு கிணற்றில் வீசப்பட்டுள்ளது.



இந்நிலையில் இது குறித்து விலங்குகள் நல ஆர்வலரான கௌதம் என்பவர் பொலிஸாரிடம் புகார் அளிக்கவே, இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த கிராமத்தில் கடந்த 3 மாதங்களில் சுமார் 200 தெரு நாய்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திரா

கர்ப்பிணி கடத்திக்கொலை

# கணவன் உட்பட 11 பேர் கைது

கர்ப்பிணியான மனைவியைக் கடத்திச் சென்று கொலை செய்த குற்றச்சாட்டில் கணவன் உட்பட 11 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ள சம்பவம் ஆந்திராவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திர மாநிலம் , ராமநாதபுரத்தை சேர்ந்த 'மாதரவள்ளி' என்பவரே இவ்வாறு தனது கணவர் ஷேக் முன்னி என்பவரால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இத்தம்பதிக்கு கடந்த 9 ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் நடைபெற்றதாகவும் இதன் போது இவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்து, இறந்து விட்டதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் மாதர வள்ளிக்கும் மகபூப் உசேன் என்பவருக்கும் இடையே கள்ளக் காதல் இருந்து வந்துள்ளதாகவும், இதனை அறிந்த முன்னி இதனைக் கண்டித்து வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



எனினும், மாதரவள்ளி மகபூப் உசேனுடன் தனது கள்ளக்காதலைத் தொடர்ந்துள்ள நிலையில் அவர் கர்ப்பமடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதனால் ஆத்திரமடைந்த ஷேக் முன்னி, பொலிஸ் அதிகாரிகளாகப் பணியாற்றி வரும் தனது இரு நண்பர்கள் உட்பட 11 பேருடன் இணைந்து தனது மனைவியைக் கடத்திச் சென்று கொலை செய்துள்ளதுடன் அவரது சடலத்தை அப்பகுதியில் உள்ள வயலில் வீசி விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இந்நிலையில் இதுகுறித்து அப்பகுதி மக்கள் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்ததையடுத்து, சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் சடலத்தைக் கைப்பற்றி வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் குறித்த பெண்ணை அவரது கணவர் உட்பட 11 பேர் கடத்திச் சென்று கொலை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து தீவிர தேடுதலின் பின்னர் குறித்த 11 பேரையும் பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வாஷிங்டன்

# கடும் கோபத்தில் புட்டின்

உக்ரேன் மீதான ரஷ்ய தாக்குதல் 5 ஆவது வாரத்தை எட்டியுள்ள நிலையில், போர் உத்தியில் ஜனாதிபதி புட்டினை ரஷ்யப் படைகள் தவறாக வழிநடத்தியிருப்பதாகவும், அதனால் புட்டின் கடுமையான கோபத்தில் இருப்பதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது குறித்து பெயர் குறிப்பிட விரும்பாத அமெரிக்க அதிகாரி ஒருவர், "புட்டின் தனது இராணுவ ஜெனரல்கள் மீதான நம்பிக்கையை இழந்துள்ளார். போர்க்களத் தகவல்களில் உண்மைக்கு மாறான நிலவரங்களை தன்னிடம் அவர்கள் தெரிவித்ததாக புட்டின் ஆத்திரத்தில் உள்ளார்" என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், துருக்கி தலைநகர் இஸ்தான்புலில் நடந்த ரஷ்ய, உக்ரேன் தரப்பு பேச்சுவார்த்தைகள் நம்பிக்கை தருவதாக கூறப்படுகிறது. ரஷ்யா படைகளைக் குறைக்க ஒப்புக்கொண்டுள்ளது.



ஆனால், இதனை சந்தேகப் பார்வையுடனேயே உக்ரேன் பார்க்கிறது. ரஷ்யா தனது தாக்குதல் கிழக்கு நோக்கி நகர்த்தலாம் என சந்தேகிப்பதாக உக்கேரன் ஜனாதிபதி வொலாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் (30) வீடியோ ஒன்றை வெளியிட்ட ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, "சுதந்திரத்திற்காக, ஜனநாயகத்திற்காக நாம் (மேற்கத்திய நாடுகள்) ஒன்றிணைந்து போராடுகிறோம் என்றால் அமெரிக்காவிடம் இன்னும் அதிகம் உதவிகள் கேட்கும் உரிமை உக்ரேனுக்கு உள்ளது. இந்தக் கடினமான நேரத்தில் தாங்கிகளும், ஆயுதங்களும் தேவைப்படுகின்றன. சுதந்திரத்திற்கான இந்தப் போரைத் தொடர ஆயுதங்கள் கொடுங்கள்" என்று வேண்டியுள்ளார்.



ஐ.பி.எல்:

# பெங்களூரை வென்ற கொல்கத்தா

இந்தியன் பிறீமியர் லீக்கில், மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கொல்கத்தா நைட் றைடர்ஸுடனான போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூரின் அணித்தலைவர் பப் டு பிளெஸி, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார். அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா, ஆகாஷ் டீப் (3), மொஹமட் சிராஜ், வனிடு ஹஸரங்க (4), ஹர்ஷால் பட்டேலிடம் (2) வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 18.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 128 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, 129 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பெங்களூர், உமேஷ் யாதவ் (2), டிம் செளதி (3), சுனில் நரைன், வருண் சக்கரவர்த்தியிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்தபோதும், ஷபாஸ் அஹ்மட்டின் 27 (20), தினேஷ் கார்த்திக்கின் ஆட்டமிழக்காத 14 (07), ஹர்ஷால் பட்டேலின் ஆட்டமிழக்காத 10 (06) ஓட்டங்களுடன் 19.2 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக வனிடு ஹஸரங்க தெரிவானார்.

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பஞ்சாப் கிங்ஸை கொல்கத்தா எதிர்கொள்ளவுள்ளது.

நியூ கலிடோனியா



# நியூ கலிடோனியா நடுங்கியது

நியூ கலிடோனியா (Caledonia) தீவிற்கு அருகே நேற்று (31) அதிகாலை 2.27 மணியளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கமொன்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலநடுக்கமானது ரிச்டர் அளவுகோலில் 7 ஆகப் பதிவாகியுள்ளதாகவும், இது நியூ கலிடோனியா தீவில் இருந்து சுமார் 407 கிலோ மீற்றர் தூரத்தில் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் இந்நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

வியட்நாம்



# மகனுக்கு பீரங்கி பரிசு

வியட்நாமைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது மகனுக்கு பீரங்கி ஒன்றைப் பரிசளித்த சம்பவம் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

குறித்த நபர் இதற்காக பழைய வேன் ஒன்றின் மேற்புறத்தில் உள்ள கதவுகள், கண்ணாடிகள் ஆகியவற்றை அகற்றிவிட்டு மரப் பலகைகளைக் கொண்டு குறித்த பீரங்கியை வடிவமைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இந்நிலையில் இது குறித்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலையில்

## வடக்கும், கிழக்கும் நாளை கராத்தே பலப்பரீட்சை

அஸ்ஹர் இப்றாஹீம்

கிழக்கு மாகாண கராத்தே சம்மேளனம் ஒழுங்கு செய்துள்ள வட மாகாணத்துக்கும், கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான கராத்தே தொடரானது, திருகோணமலை மக்கெய்ஸர் உள்ளக விளையாட்டரங்கில் நாளை இடம்பெறவுள்ளது.


இதில் 14 வயதுக்கு மேற்பட்ட, 16 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்ட, 18 வயதுக்கும் 21 வயதுக்கும் இடைப்பட்ட, 21 வயதுக்கு மேற்பட்ட வயதுப் பிரிவுகளில் பெல்ட் மற்றும் கிலோ கிராம் அடிப்படையிலும் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

சுவிட்சர்லாந்து

# மீட்புப் பணியில் ரோபோ

சுவிட்சர்லாந்தில் மீட்பு, விநியோகம் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொள்ள பன்முகத்தன்மை கொண்ட நவீன ரோபோக்களை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

மனிதர்களை போன்று இரு கால்களில் இயங்கக் கூடிய வகையிலும் ,அதேபோல் நான்கு கால்களில் சக்கரங்கள் பொருத்தப்பட்டு ஊர்ந்து செல்லும் வகையிலும் , மணிக்கு 20 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக் கூடிய வகையில் குறித்த ரோபோக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.



மேலும் விரைவில் 100 கிலோகிராம் வரை எடையை கையாளும் வகையில் குறித்த ரோபோக்கள் மேம்படுத்தப்படவுள்ளதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



# இன்டர் மிலனுக்கு செல்லும் லுகாகு?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் முன்களவீரரான றொமெலு லுக்காக்கு, மீண்டும் இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனுக்குச் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த பருவகாலத்தில் இன்டர் மிலனிலிருந்து செல்சியில் இணைந்த 28 வயதான லுக்காக்கு, 19 போட்டிகளில் ஐந்து கோல்களை மட்டுமே பெற்றுத் தடுமாறி வருகின்றார்.

இந்நிலையிலேயே, கடனடிப்படையில் லுக்காக்குவை இன்டர் மிலன் ஒப்பந்தம் செய்ய முயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டோக்கியோ

# ஜப்பான் திட்டவட்டம்

ரஷ்யாவின் ஷக்லின் தீவில் உள்ள கடல்பகுதியில் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு அதிக அளவில் உள்ளது. இந்த கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை எடுக்கும் திட்டத்தை ரஷ்ய எண்ணெய் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

ஷக்லின்-2 என்று பெயரிடப்பட்டுள்ள இந்த திட்டத்தில் ஜப்பான் அரசும் ரஷியாவுடன் இணைந்து செயல்படுகிறது. இந்த திட்டத்தில் ஜப்பானின் இரு நிறுவனங்கள் மொத்தம் 22.5 சதவீத பங்குகளை வைத்துள்ளது.



இந்த திட்டத்தின் மூலம் ரஷ்யாவில் இருந்து ஜப்பானுக்கு இயற்கை எரிவாயு அதிக அளவில் கிடைக்கும். இந்த திட்டம் ஜப்பானின் எரிபொருள் தேவையில் கணிசமான அளவை பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், உக்ரேன் மீதான தாக்குதலை கண்டிக்கும் வகையில் ஷக்லின்-2 திட்டத்தை ஜப்பான் கைவிட வேண்டும் என பல்வேறு தரப்பிலும் கோரிக்கைகள் எழுந்தன. ஆனால், ரஷியாவுடன் இணைந்து மேற்கொண்டு வரும் இயற்கை எரிவாயு எடுக்கும் திட்டத்தை கைவிடப்போவதில்லை என்று ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

# ஆர்சனல் செல்லும் டிபாலா?

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஜுவென்டஸின் முன்களவீரரான போலோ டிபாலாவை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனல் கைச்சாத்திடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

28 வயதான டிபாலாவின் ஜுவென்டஸுடனான ஒப்பந்தமானது நடப்புப் பருவகாலத்துடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜுவென்டஸுக்காக 202 போட்டிகளில் 80 கோல்களை டிபாலா பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 01 ஏப்ரல் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.